159

**Registered No. M. 878.**

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

*Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.*


| | | |
|---|---|---|
| தொகுதி 5. | 1914ஹு அக்டோபர்மீ 15உ<br>ஆநந்தஹு புரட்டாசிமீ 29உ | பகுதி 6 |


அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A. B.L., F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.　　　தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

CONTENTS.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர்.<br>From the Editor—A. Rangaswamy Iyer. | 201 |
| 2. | ஸ்வாமி இராமதீர்த்தர் சரித்திரச்சுருக்கம்—கே. எஸ். இராமச்சந்திரையர்.<br>Life of Swami Rama Thirtha—K. S. Ramachandrier | 209 |
| 3. | வருங்கால லக்ஷ்யங்கள்—Mrs. அன்னிபெஸண்டு<br>Ideals of the Future—Mrs. Annie Besant | 213 |
| 4. | ரிஷிகள் அல்லது மஹாத்மாக்கள்—அ. ரங்கஸ்வாமிஐயர்<br>Rishis or Masters—A. Rangaswamy Iyer | 217 |
| 5. | தோற்றாத்துணைவர்கள்—அ. நம்மாழ்வார்<br>Invisible Helpers—A. Nammalwar. | 220 |
| 6. | என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர்<br>Why not I?—Attangudy M. Swaminathier | 226 |
| 7. | ஸ்வர்ணமணிமாலை என்ற சங்கம்—B. S. ராமசுப்பையர்<br>Order of the Golden Chain—B S. Ramasubbier | 229 |
| 8. | சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தாநந்தர்<br>Children's Corner—Vasanthananda | 232 |
| 9. | சமாசாரம்<br>News | 237 |

| பிழை. | திருத்தம். | |
|---|---|---|
| ஒட்டிக்கொள்கின்றனவோ | ஒட்டிக்கொள்கின்றனவில்லையோ | 240 |

***Do you like to make your home happy?***

If so,

*Please subscribe*

**Female Education**

It educates

It enlightens

Subscription Rs 2—8—0 per annum.

If you have not seen before, send one anna for sample copy

Manager,
'FEMALE EDUCATION'
Madras E.

# பூர்ணசந்திரோதயம்.


| | | |
|---|---|---|
| தொகுதி 5. | 1914௵ அக்டோபர்௴ 15௳<br>ஆநந்த௵ புரட்டாசி௴ 29௳ | பகுதி 6 |


## தற்கால நிலைமை.

இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களின் முக்கியமான பத்திரிகைகளில் இப்பொழுது நேர்ந்திருக்கும் யுத்தத்தினால் ராணுவ அரசாட்சி என்பது (Militarism) அழியும் என்று சொல்லப்படுகிறது. ராணுவ அரசாட்சி என்பது யாது என்று விசாரிக்குங்கால், நீதியைக் கைப்பற்றாத ஆற்றலைக்குறிக்கிற ராணுவ பலத்தால் ஆளுதல் என்று அர்த்தமாகும். சரீரபலமட்டுமுள்ளவனிடத்து நியாயம் உறையும் என்பது எம்மாத்திரம் சத்தியமோ, அம்மாத்திரம் ராணுவபலத்துடன் கூடின அரசன் நியாயவான் என்பது உண்மையாகும். சென்ற சில வருஷங்களாக ஜெர்மனி தேசமானது ராணுவபலச் செருக்கினால் அற்ப பலமுள்ள தேசங்களை மதியாது நியாயவிரோதமான மார்க்கங்களில் துணியும் போல் தோன்றி, பிருகிருத யுத்தத்தில் அதற்குத் தக்கவாறு நடந்து பெல்ஜியம் என்ற சிறு தேசத்தில் தன் சுயநலத்தைமட்டும் கருதிப் படையெடுத்துச் சென்றது.

* * *

இதுவரையில் நிகழ்ந்த சங்கதிகளை யறிந்தமட்டில் ஜெர்மனி தேசத்தின் கருத்து நிறைவேறுதற்கு அநேக விக்னங்கள் தெய்வா

தீனமாய் உண்டாகிக்கொண்டு வருகின்றன. பாரீஸ் நகரத்தைப் பிடிப்பதற்குஅந்நகரின் அருகாமைவரை விரைவாகச்சென்ற ஜெர்மன் சைன்யம் ஆங்கிலேய பிரான்ஸ் தேசத்திய ராணுவங்களால் திரும்பிப்போகும்படி செய்யப்பட்டிருக்கின்றது. அன்றியும் ஜெர்மனிதேசத்தின் மித்திரனாகிய ஆஸ்திரியா தேசத்தின் ராணுவங்கள் இதுவரையில் அபஜயத்தையே அடைந்திருக்கின்றன.

***

பிரஹ்மக்ஞான சபையின் மூலமாய் வெளியிடப்படும் தத்துவங்களுக்கும் இப்போதுஉலகத்தில் நிகழ்ந்துவரும் விஷயங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்பதுவிசாரிக்கத்தக்கது. வருங்காலத்தில் மதத்துவேஷமும் ஜாதி வைஷம்யமும் குறைந்து சகோதரபாவம் அதிகரித்து, நாகரிகம் அபிவிருத்தியாகுமென்றும், அதற்கு உலகத்தில் பிரபலமாயுள்ள மதங்களுக்குப் பொதுவான தத்துவங்களடங்கியகுப்தவித்தையை (Wisdom Religion) பெரும்பான்மை ஜனங்கள் கைக்கொள்வார்களென்று பிரஹ்மக்ஞான சபையின் தலைவர்களால் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கின்றது. தவிரவும் சமீபத்தில் வியாஸர் என்ற அதிகாரத்தை வகிக்கின்ற ஜகத்குருவானவர் அவதரிக்கப்போகிறாரென்றும் வெளியிடப்பட்டு வருகின்றது. அவருடைய அவதாரமானது சமாதானத்தோடும் மைத்திரபாவத்தோடும்கூடிய ஒரு கல்பகாலத்தை ஆரம்பிக்கும் இயற்கையை உடையதாதலால், அவர் தோன்றுமுன்னர் அதற்கு விக்னமாயுள்ள உலக இயற்கையானது மாறவேண்டியது அத்யவசியம். மேற்றிசை நாடுகளில் உலகசமாதானத்திற்கு விரோதமான அவ்வியற்கையானது ராணுவ பலத்தின் அமிதமான அபிவிருத்தியையும் உலகசம்பத்தையே நோக்கமாகக்கருதியவணிகத்தன்மையையும்(Commercialism)கைக்கொண்டு விளங்குகின்றது. உலக சமாதானத்தைப் பரவச்செய்ய ஹேக் (Hague) என்னும்பட்டணத்தில் பல தேசத்தார்கள் தங்களுக்குள் ஏற்படும் விவாதங்களை பஞ்சாயத்து மூலம் விவஸ்தை செய்துகொள்ள ஒரு நியாயஸ்தலம் சில வருஷங்களாக நடைபெறுகிறது.

***

ஆனால் அந்த நியாயஸ்தலம் சில வருஷங்களாக நடைபெற்று வந்தாலும், அற்பவிஷயங்களைச் சமாதானமாகத் தீர்ப்பதில் மட்டும் அது உபயோகப்பட்டதே தவிர கோரமான யுத்தத்தை உண்டுபண்ணும் காரணங்களை அது நிவர்த்திக்கச் சக்தியற்றதாய் இருந்தது. அதற்கு இப்பிரக்ருத யுத்தமே ஒரு உதாரணமாகும். லோகாசாரியர் அவதரிக்குமுன் சாந்தமான முறைகளினால் உலகத்தில் சமாதானம் பரவுதல் அசாத்தியமாயின், கோரமான வழிகளாலாவது அச்சமாதானம் நிலை நிற்கவேண்டியது அவசியமாயிருத்தலால்

இவ்யுத்தமே அச்சமாதானத்திற்குக் காரணமாகத் தோன்றுகிறது என்றே நாம் சொல்லத் துணியலாகும்.

* * *

எவ்வாறு குருக்ஷேத்திர யுத்தகளத்தில் அதர்மத்தில் வெகுகாலம் சென்றுகொண்டிருந்த க்ஷத்திரிய பலமானது அதே க்ஷத்திரிய பலத்தால் வேரோடு களையப்பட்டதோ, அவ்வாறு ஐரோப்பாக் கண்டத்தில் சிலகாலமாக வேரூன்றி பலமடைந்து தர்மத்திலிருந்து விலகி அபிவிருத்தியடைந்த Militarism என்ற அதர்மராணுவ பலமானது ராணுவ பலத்தாலேயே அடக்கப்படுமென்று தோன்றுகிறது. உலகமுழுவதுக்கும் க்ஷேமகரமான பரமாசாரியர் அவதரிக்கும் முன்னர் உலகத்திற்குக் கெடுதியை உண்டுபண்ணத்தக்க அதர்மராணுவ பலம் நாசம் அடைவதற்கு நம்மைச் சுற்றிலும் பல சின்னங்கள் தோன்றுவது சம்பாவிதம்.

* * *

சில வைத்திய முறைகளிற் கூறப்படுகின்ற பிரகாரம் உயிருக்கு அபாயத்தை உண்டுபண்ணுகிற வியாதிகள், அந்த உயிருக்கு அபாயத்தை உண்டுபண்ணத்தக்க பாஷாணசம்பந்தமான அவிழ்தங்களால் எவ்விதம் நிவிர்த்தியடைகின்றனவோ, அவ்விதமே அதர்ம ராணுவபலம் (Militarism) என்ற, உலக நாகரிகத்திற்குத் தடையாயிருக்கும் வியாதி அதுபோன்ற பிரயோகங்களால் விலக்கத்தக்கது. பிரகிருதயுத்தத்தில் நேரிடும் செலவையோசித்து இந்த அதர்ம ராணுவ பலத்தின்(Militarism)கேட்டையும் அதை நீக்குவதில் உண்டாகும் பிரயாஸத்தையும் ஒருவாறு அறியலாம். யுத்த ஆரம்பமாகுமுன் ஸர் ஜார்ஜ் ஆஸ்டன் என்பவர் தாம் எழுதின ஒரு கிரந்தத்தில் தற்காலத்தில் நிகழும் போரில் நேரிடும் செலவை சுமாராகக் கணக்கிட்டிருக்கிறார். ஒருபெரிய ஐரோப்பா மஹாயுத்தத்தில் எல்லா ஸைன்யங்களுக்குமாக மொத்தமாய் தினம் 1க்கு 93 லக்ஷம் பவுன் செலவழியுமென்றும், அதில் ஜெர்மனி தேசத்திற்கு 22 லக்ஷமும் ருஷியாதேசத்திற்கு $22\frac{1}{2}$ லக்ஷமும் பிரான்ஸ் தேசத்திற்கு 18 லக்ஷமும் ஆஸ்திரியா தேசத்திற்கு 15 லக்ஷமும் ஆங்கிலேய தேசத்திற்கு 8 லக்ஷமும் இத்தாலி தேசத்திற்கு $7\frac{1}{2}$ லக்ஷமும் செலவாகுமென்று மதித்திருக்கின்றனர்.

* * *

ஆகையால் தற்காலத்தில் நிகழும் மகாயுத்தம்போல் மறுபடியும் யுத்தம் நடப்பது துர்லபம் என்று தோன்றுகிறது. இந்த யுத்தமுகமாக ஐரோப்பிய தேசங்களின் தற்கால எல்லைகள்மாறி புதிதான எல்லைகள் நிர்மாணம்செய்யப்பட்டு நீடூழிகாலம் யுத்தம் நிகழாவண்ணம் பெரிய தேசங்களுக்குள் சாசுவத சமாதான ஒப்பந்தங்கள்

நிலைபெறும்போல் தோன்றுகின்றது. மேற்சொல்லிய காரணங்களால் தற்கால வர்த்தமானங்களிலிருந்தே உலகத்தின்கண் மகத்தானமாறுதல்கள் தோன்றப் போகின்றன வென்றும், அம்மாறுதல்கள் உலகக்ஷேமத்திற்கு ஆதாரங்களாக வுள்ளனவென்று காட்டும் பரமாசிரியன் தோன்றும் காலம் சமீபித்திருக்கின்றதென்றும் நாம் ஊகிக்கலாம்.

***

சென்ற சில வருஷங்களாக நமது பிரஹ்மக்ஞான சபை அக்கிராசனாதிபதியவர்கள் அவர்களுடைய பிரஸங்கங்களில் இந்தியாவும் ஆங்கிலேய தேசமும் ஒன்று சேர்ந்துகொண்டு இப்போதிய பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தை இன்னும் கம்பீரமான தசைக்குக் கொண்டுவரப் போகின்றனவென்றும், அப்பொழுதுதான் 5-வதுபிரிவான (பஞ்சஜனர்கள்) ஆரியர்களின் நாகரிகமானது உன்னதமான பதவியை அடையுமென்றும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர். அதற்காதரவாக இந்திய சைன்யங்கள் பிரிட்டிஷ் ராஜ்பமண்டலத்தின் பாதுகாப்புக்காக ஐரோப்பிய யுத்தத்திற்குச் சென்றிருக்கின்றன. இந்தியாவும் ஆங்கிலேய தேசமும் இந்த யுத்தத்தின் மூலமாக நெருங்கின ஐக்ய பாவத்தை அடைந்து கொண்டுவருகின்றன.

***

இந்திய சைன்யங்கள் இங்கிலீஷ் சைன்யங்களோடு ஒன்றுசேர்ந்து சமமாக எதிரியுடன் போர்புரிவது வெண்மை, கறுப்பு என்ற மனிதர்களின் சரீர நிறத்தைச் சார்ந்த பஹிர் வித்தியாசங்களினால் ஏற்படும் துவேஷத்தைக் குறைக்கத்தக்கது. பரமாசாரியர் அவதரிக்கும்கால் இவ்வர்ண வித்தியாஸங்களைக் கைக்கொண்ட துவேஷம் தேய்வை அடையாமலிருப்பின் அவருடைய உபதேசத்தை உலகம் ஏகோபித்து ஆவலுடன் உட்கொள்ளாது. அவர் இந்திய சரீரத்தை ஸ்வீகரித்தால் அத்துவேஷத்தால் மேற்றிசையோர் அவரை பெரும்பாலும் அங்கீகரியார். ஆகையால் அவர் தோன்றுமுன்னர் அத்துவேஷத்தின் தீவிரம் மறையத்தக்கது. அம்முடிவின் சம்பவத்திற்கு இந்த யுத்தமும் ஒரு காரணமாகும் போல் தோன்றுகிறது.

***

ஸகாராம் கணேச பண்டிதர், நமது பிரஹ்மக்ஞான சபையின் அங்கத்தினர். அவர் மகாராஷ்ட்ர பிராமணர். சில வருஷங்களுக்கு முன் இந்தியாவில் பிரஹ்மக்ஞான விஷயங்களைப் பற்றி பிரசங்கம் செய்துகொண்டு வந்தார். அதற்குப்பிறகு அவர் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களுக்குச் சென்றார். அம்மாகாணங்களில் ஒன்றாகிய காலிபோர்னியா (California) மாகாணத்தில் அமெரிக்கன் நகர வாசியாக (American Citizen) தன்னை ஏற்றுக்கொள்ளும்படி அவர் முயற்சி செய்து

அவருடைய பலமான பிரயத்தனத்தின் பேரில் அவரை அமெரிக்கன் நகரவாசியாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஐக்கிய மாகாணங்களின் நகரவாசியாக அங்கீகரிக்கப் படுவதற்கு அதைச்சார்ந்த சட்டப்பிரகாரம் ஒருவன் 'சுவாதந்திரியமுள்ள வெண்மையான மனிதனாக' (Free white person) இருக்கவேண்டும். காலிபோர்னியா மாகாணத்தின் நியாய ஸ்தலத்தில் அவ்வார்த்தைகளுக்குத் தாத்பரியம் அம்மாகாணங்களின் நகரவாசியாக அங்கீகரிக்கப்பட விரும்புகிற மனிதன் காகேஸியன் ஜாதியென்ற ஆரிய வகுப்பில் ஜனித்திருந்தால் போது மென்றும் அவன் சரீரத்தின் வர்ணம் வெண்மையாயிருந்தாலும் அல்லது கறுப்பாயிருந்தாலும் பாதகமில்லையென்றும் தீர்மானமாயிருக்கிறது. மகாராஷ்ட்ர தேசத்தில் பிறந்த பிராமணரை ஐக்கிய மாகாணங்களின் சட்டத்தில் சொல்லப்படுகிற 'Free white person' ஆக ஒப்புக்கொண்டு ஸகாராம் கணேச பண்டிதரை அம்மாகாணங்களின் நகரவாசியாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

* * *

அவரை அம்மாகாணங்களின் நகரவாசியாக ஒப்புக்கொண்ட விஷயம் மட்டில் ஒரு பெரியகாரியமல்ல. உலகத்தில் தேகவர்ண வித்தியாஸங்களினால் ஏற்படும் மித்திரமின்மையானது குறைந்து வருவதற்கு அத்தீர்மானமே ஒரு அறிகுறியாகும்.

* * *

பிரஹ்மஞான சபையின் இந்தியன் ஸெக்ஷன் காரியதரிசி அவர்கள் அடியிற்கண்ட விளம்பரத்தை அவருடைய மாஸாந்தர பத்திரிகையாகிய Theosophy in India ல் பிரசுரப்படுத்தி யிருக்கிறார் :—பிரஹ்மஞான சபையின் கணக்கு சம்பந்தமான வருஷம் செப்டெம்பர்மீ 30-ம் தேதியோடு முடிவுபெறுகின்றது. அந்தந்த மெம்பர் செலுத்த வேண்டிய வருஷாந்திர சந்தாவைக் கூடியசீக்கிரத்தில் அனுப்பவேண்டும். இந்த சந்தாதொகைகளை மெம்பர்கள் காலாகாலங்களில் அனுப்பாத காரணத்தால் இந்தியன் ஸெக்ஷன் வேலைகளில் சீக்கிரத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியமான சீர்திருத்தங்கள் தடைபட்டு நிற்கின்றன. அவைகளுக்கு திரவியம் தேவையா யிருக்கின்றது. உலகத்திலுள்ள பிரஹ்மஞான சபையின் பிரிவுகளில் இந்தியன் ஸெக்ஷனில் அதிக மெம்பர்கள் இருக்கின்றனர். இந்த மெம்பர்கள் அவர்கள் செலுத்த வேண்டிய சந்தாத்தொகைகளை ஒழுங்காக காலந்தவறாமல் அனுப்பினால் இந்தியன் ஸெக்ஷனுடைய அந்தஸ்துக்குத் தக்கவாறு வேலை நடக்கும். மெம்பர்கள் அவர்களாகவே காலாகாலங்களில், அவர்களுடைய சந்தாத்தொகைகளை அனுப்பாத குறைவினால்அனாவசியமானசிற்பந்திகளின் சம்பளச்செலவும் தபாற்செலவும் வீண்செலவாகிறது. அவரவர்கள் செலுத்தவேண்டிய சந்தாத்தொகைகளை அவரவர்களே

தூண்டுதலின்றி அனுப்பினல் ஸெக்ஷன் உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் வசூல்வேலையைவிட்டு இன்னும் முக்கியமான விஷயங்களை ஊக்கத்துடன் கவனிக்கலாம்.

***

கவுண்ட்டால்ஸ்டாய் என்பவர் ருஷியாதேசப்பிரபு. அவர் கொஞ்சகாலத்திற்கு முன் காலஞ்சென்ற ஓர் ஞானி. அவர் தற்காலங்களில் நிகழும் விஷயங்களைக் குறித்து முன் அறிந்ததுபோல் எழுதிவைத்திருக்கின்றனர். அக்குறிப்புடன் இக்காலத்திய வர்த்தமானங்களை ஒத்துப்பார்க்கின் விநோதமாயிருக்கும். அதாவது "சமீபத்தில்நடக்கப்போகிற உலகசமாசாரங்களை வெளியிடுகிறேன். அவைகள் ஸ்தூலமாக எனக்குத் தோற்றுகின்றன. மானிட விதியைக்காட்டுகின்ற சமுத்திரத்தில் ஒரு நிர்வாணஸ்திரீ மிதக்கிறதை நான் பார்க்கிறேன். அவளுடைய அழகாலும் அமைப்பாலும் மந்தஹாஸத்தாலும், அணிகலங்களாலும், அதிரூப லாவண்யத்துடன் விளங்குகின்றாள். அவளைத்துயர்ந்து பித்துப்பிடித்தவர்கள்போல் பலதேசத்தார்கள் விரைவாகச் செல்லுகிறார்கள். அவளை வசப்படுத்த அவர்களில் ஒவ்வொரு தேசத்தாரும் முயலுகிறார்கள். அவள் எல்லோரிடத்திலும் செல்லுகின்ற விலைமகள்போல் காண்கிறாள். அவள் தலையில் அணிந்துகொண்டிருக்கிற மாணிக்கம் வைரம் முதலிய கற்களால் செய்யப்பட்ட ஆபரணங்களில் அவளுடைய பெயர் வரையப்பட்டிருக்கின்றது. அவளுக்கு 'வணிகத்தன்மை' (Commercialism) என்று பெயர். அவளுடைய ரூபம் மனதைக் கவரத்தக்கதா யிருப்பினும் அவள் செல்லுமிடமெல்லாம் கெடுதியும் துன்பமுமே சம்பவிக்கின்றன. அவளுடைய அழகில் மருளுகின்ற தேசத்தார்களுக்கு, லோப வியாபாரங்களில் செல்லும் அவளுடைய சுவாசமும், சுவர்ணம்போல் கிணீர் என்று சப்திக்கும் அவளுடைய குரலும் பேராசையைக் காட்டும் அவளுடைய பார்வையும் நஞ்சுபோல் ஆகின்றன.

***

அவளுக்குப் பெரிதான மூன்றுகைகள் உண்டு. ஒவ்வொரு கையிலும் உலகத்தை அழிக்கின்ற ஒரு தீப்பந்தத்தை வைத்துக்கொண்டிருக்கின்றாள். அந்த சௌந்தர்யமுள்ள வேசியானவள் ஊர் ஊராய் தேசந்தேசமாய் பரவச்செய்கின்ற யுத்தம் என்ற அனல்தான் அவள் ஒருகையில் வைத்திருக்கும் பந்தம். பலமான தேஜஸுடன் கூடின தேசாபிமானமானது அதற்கு பிரதியுத்தரம் செய்கின்றது. ஆனல் அதின்முடிவு துப்பாக்கி பீரங்கிகளுடைய முழக்கமாய் ஏற்படுகின்றது. இரண்டாவது பந்தமோ மூடபக்தி மித்தியாசாரங்களைக் குறிப்பிடுகின்றது. தேவாலயங்களிலும் புனிதமான இடங்களிலும் தீபம் ஏற்றும் வேஷத்தைத் தரிக்கின்றது. ஆனல் அஸத்தியத்தையும் அவிவேக பக்தியையும் கைக்கொண்டிருக்கின்றது. பாவி

யம் முதல் மரணபரியந்தம் மனிதர்களுடைய மனதைக் கெடுக்கின்றது. மூன்றாவது பந்தத்திற்கு சட்டம் என்று பெயர். உண்மையில்லாத கொள்கைகளுக்கெல்லாம் அது ஆஸ்பதம். முதலில் குடும்பங்களைக் கெடுத்து கிரந்தங்கள்மூலமாயும் கலைகள்மூலமாயும் ராஜதந்திரமூலமாயும் அதிவிரைவாய் அந்தக் கெடுதியைப் பரவச்செய்கின்றது.

***

"ஐரோப்பாகண்டத்தின் தென்கிழக்கிலுள்ள தேசங்களில் முதல் கையில் உள்ள பந்தமானது 1912ம் வருஷத்தில் ஒரு பெரிய ஜ்வாலையை உண்டுபண்ணும். 1913ம் வருஷத்தில் நாசம்அதிகரிக்கும். அந்தவருஷத்தில் ஐரோப்பாகண்டமுழுவதும் அக்னி ஜ்வாலையில் ரத்தமாயிருப்பதை நான் பார்க்கிறேன்.' பெரிய ரணகளங்களின் கூக்குரல் என்காதில் விழுகின்றது. ஆனால் 1915ம் வருஷத்தில் உத்தரபாரிசத்திலிருந்து ஒரு புருஷன் தோன்றுகிறான். அவன் ஒரு நூதன நெப்போலியன்போல் இந்த ரத்தமயமான நாடகத்தின்கண் பிரவேசிக்கிறான். அவனுக்கு யுத்தப்பயிற்சி கிடையாது. அவன் கிரந்தம் எழுதுவோன். பத்திரிகை பிரசுரம்செய்வோன். அவன் கையில் ஐரோப்பாகண்டத்தின் பெரும்பாகம் 1925ம் வருஷம் வரை அகப்பட்டுக்கொண்டிருக்கும். இக்கெடுதியின்முடிவில் உலகத்தின் குணகோளத்தின் ராஜரீகத்தில் ஒரு நூதன கல்பம் ஆரம்பம் செய்யும். வெவ்வேறு ராஜாங்கங்கள் மறைந்து ஐக்கிய தேசங்கள் நான்கு தோன்றும். அவைகள் அங்கிலோ ஸாக்ஸன், லத்தின், ஸ்லேவ், மங்கோலியன் தேசங்கள்.

***

"1925-ம் வருஷத்திற்குப்பிறகு மத அபிப்பிராயங்களில் நான் ஒரு மாறுதலைப் பார்க்கின்றேன். அந்த வேசியினுடைய இரண்டாவது பந்தமானது மதக்கோட்பாடுகளுக்கு நாசத்தை உண்டு பண்ணிற்று. நியாயம் என்ற எண்ணம் அநேகமாய் மறைந்துவிட்டது. மனிதர்களுக்கு நல்ல உணர்ச்சி இல்லாமல் போய்விட்டது. ஆனால் சீர்திருத்தஞ் செய்யக்கூடிய ஒரு புருஷன் கிளம்புகின்றான். உலகத்தில் தெய்வத்தை மனுஷ்யனைப்போல குணங்களையுடையதாக பாவிக்கும் மதச்சின்னங்களை உலகத்தினின்று அப்புறப்படுத்தி வேதாந்தத்தை ஸ்தாபிக்கப்போகின்றான். ஈசுவரன், ஆத்மா, அமிருதத்வம் இவைகளைப்பற்றிய மனோபாவங்கள் புதிதாக அமைக்கப்படும்."

***

"இந்த அதிகாரத்தைக் கொண்டு செலுத்தத்தக்க புருஷன் மங்கோலிய ஸ்லேவ் ஜாதியைச்சேர்ந்தவன். இப்பொழுது அவன் உலக வியவகாரங்களில் சம்பந்தித்து இப்புவியில் இருக்கின்றான். அவனுக்கு மேலானவர்களால் ஒப்புவிக்கப்படப்போகிற இந்த அதிகாரத்தை அவன் இப்பொழுது அறிந்திலன். மூன்றாவது பந்தத்தின் ஜ்வாலையானது நம்முடைய குடும்ப பாந்தவ்ய விஷயங்களைக் கெடு

த்து சாஸ்திரங்களிலும் ஒழுக்கங்களிலும் விபரீத புத்தியை ஏற்க னவே கொடுத்துவிட்டது. புருஷ ஸ்திரீஸம்பந்தமானது கேவலம் சரீரத்தைச் சார்ந்ததாய்விட்டது. கலைகள் ஜீவனை மேல்நோக்கிச் செலுத்தும் கருவிகளாயிராமல் கேவலம் இந்திரிய அநுபவங்களை மட்டும் கருதுகின்றன. இராஜாங்கம், மதம் இவைகள் சம்பந்த மான குழப்பங்கள் தேசங்களின் சூக்ஷ்ம ஆதாரங்களைத் தடுமாறச் செய்கின்றன. இந்த மூன்று கொடிய தீப்பந்தங்களின் அனலிலிரு ந்து தப்பித்த இடங்கள் ஏகதேசம் இங்குமங்கும் சொற்பம் இருக்கி ன்றன. ஐரோப்பாகண்டத்தில் தேசத்தை தேசம் எதிர்த்துக் கைக் கொண்ட விரோதத்தால் ஏற்பட்ட யுத்தங்கள், அமேரிக்காவில் ஜன ஸமூகத்தின் பலவகுப்பாருக்குள் ஏற்பட்ட துவேஷம் ஆசியாகண்ட த்தில் பலஜாதியாருக்குள்ஏற்பட்டவிரோதம் இவைகள் உலகாபிவிரு த்தியை சென்ற 50வருஷங்களாகத்தடுத்துவிட்டன. ஆனால் இந்த நூற்றாண்டின் மத்தியில் கிரந்தங்களிலும் கலைகளிலும் தேர்ந்த ஒரு புருஷன் லத்தீன் ஜாதியாருக்குள் தோன்றி, அவைகளில் உண்டா யிருக்கும் கெடுதியை விலக்கப்போகிறான். 'வணிகத்தன்மை' (Commercialism) என்ற பந்தத்தைக் காட்டிலும் பிரகாசிப்பது தத்துவார்த்தத்தின் (Symbolism) தேஜஸ். கேவலம் இந்திரியா னந்தத்தைமட்டும் கைக்கொண்ட தற்கால பலவிதவிவாகங்கள் அப் பியாஸத்தினின்று விலகி அதின் ஸ்தானத்தில் ஆத்ம சம்பந்தத்தை ஆதாரமாகவுடைய விவாகம் ஊர்ஜிதத்திற்கு வரக்கூடியது. எல் லாதேசத்தார்களும் ஞானத்தில் முதிர்ந்து அவர்களுடைய கதியில் தோன்றி அவர்களுடைய மனஸைக்கவர்ந்த இந்த ஸ்திரீயானவள் மாயையைத்தவிர வேறில்லையென்று அறிகிறார்கள். அந்தக்காலத் தில் உலகத்தில் ஸைன்யங்களுக்கும், கபட மார்க்கங்களில் செல்லா நின்ற மதக்கோட்பாடுகளுக்கும், மனிதனைக் கீழ்நோக்கிச் செல்லும் படி செய்கின்ற கலைகளுக்கும் உறைவிடம் ஏற்படாது. விகாஸமு றையில் ஜீவன் மேல்நோக்கிச் செல்லுகின்றது. சுலபமான ரூபங்க ளில் ஆரம்பித்து மனஸ், சரீரம் அவைகளில் அதிசூக்ஷ்ம மான ரூபங்களை விகாஸமுறையில் அடைகின்றது. உலக நாடகம் தற்கால அமைப்புடன் ஒருகாட்சியாக எனக்குக்காணப்படுகின்றது. அஸ்தகிரியில் அஸ்தமனமாகும் தருணத்தில் மறையும் செவ்வானம் போல் அது மறைகின்றது. 'வணிகத்தன்மை' (Commercialism) என்ற கையானது அப்புறம் மறைந்தபிற்பாடு உலகத்தில் ஒரு புது சரித்திரம் ஆரம்பிக்கின்றது.

***

கவுண்ட் டால்ஸ்டாய் சொல்லிய விருத்தாந்தங்களில் சிலபாகம் பிசகிப்போவதற்கு இடம் ஏற்படினும் பொதுவாக அவருடைய தீர்க்கதரிசனம் ஆச்சரியத்தைக் கொடுக்கத்தக்கது.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# ஸ்வாமி இராமதீர்த்தர் சரித்திரச் சுருக்கம்.

கோசேன் தீர்த்தர் என்று திருநாமம் உடைய இராமதீர்த்தர் என்பவர் 1873-ம் வருஷம் தீபாவளி தினத்துக்கு முதல் நாள் பஞ்சாப்பைச்சேர்ந்த (Guzaranwala) குசரன்வாலா என்ற ஜில்லாவில் பிறந்தவர். இவர் ஹிந்திபாஷையில் இராமாயணத்தைக் கீர்த்தனமாகப்பாடிய துளசிதாஸ் வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் பிறந்த சொற்ப தினங்களுக்கெல்லாம் அவர் தாயார் காலஞ்சென்றுவிட்டாள். பாலியத்தில், அவர் தமையனார் கோசேன்குருதாஸ் என்பவராலும் அவர் அத்தை அம்மானாலும் வளர்க்கப்பட்டு வந்தார். அவர் பாலியத்தில் சாதாரணக் குழந்தைகளைப் போல் நடக்காமல் விநோதமாக நடந்து வந்தார். புராணங்கள், மகாபாரதம், பாகவதம் இந்தக் கிரந்தங்கள் வாசிக்கப்படு மிடத்திற்குப் போய்க் கதைகளைக் கவனமாய்க் கேட்பார். அப்பால் கேட்டவைகளைப் பற்றித் தனிமையாயிருந்து சிந்தனை செய்வார். அவைகளைப்பற்றி மற்றவர்களை அநேகங்கேள்விகள் கேட்பார். கேள்விகளுக்கு அப்படிக் கேட்கப்பட்டவர்கள் விடைகொடுக்க முடியாவிட்டால் தானே உத்தரம் சொல்வார்.

இவரை, இளமைப் பிராயத்திலேயே இவர் குலத்தில் உதித்த வரகவி (Genius) என்று அக்காலத்திய ஜ்யோஸ்யர்கள் சொல்லிவந்தார்கள். இவர் அதிகப் புத்திசாலி, ஒவ்வொரு பரீக்ஷையிலும் நன்றாகத்தேறி வந்தார். பி. ஏ. பரீக்ஷையில் முதல்வராகத்தேறினார். இவர் கணிதசாஸ்திரத்தில் (Mathematics) மிகவும் சமர்த்தர். இதில் எம். ஏ. பட்டம் வெகு கீர்த்தியுடன் பெற்றார். இவர் உபாத்தியாயர்களெல்லோரும் இவரிடம் அதிகப் பிரியமாயும் அன்பாயுமிருந்துவந்தார்கள். லாகூர் பார்மியன் க்ரிஸ்டியன் காலேஜில் கணித சாஸ்திர பண்டிதராக வேலையில் நியமிக்கப்பட்டு அந்த வேலையை இரண்டு வருஷம் பார்த்து வந்தார். அப்பால் லாகூர் ஓரியெண்டல் காலேஜில் ரீடர் வேலையைக் கொஞ்சகாலம் பார்த்துவந்தார்.

லாகூர் கவர்ன்மெண்டு கல்லூரியின் பிரதான உபாத்தியாயர் மேஸ்தர்பெல் என்பவர் இவர் புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் பார்த்து இவரை புரோவின்ஷியல் ஸிவில்ஸேர்விஸ் பரீக்ஷைக்குப் போகும்படி சொன்னார். ஆனால் அவருக்கு அதில் விருப்பமில்லை.

இந்தியா கவர்ன்மெண்டார் கொடுத்து வந்த ஸ்காலர்ஷிப்பை வாங்கிக்கொண்டு ஆங்கிலேய தேசத்துக்குச் சென்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கணித சாஸ்திரத்தில் ஸீனியர் ராங்கிளர் பட்டம்

பெற்று வரும்படியாக அநேகர் அவரிடம் சொன்னார்கள். ஆனால், இவர், தத்துவ விசாரணைசெய்து அதைப் பலதேசங்களுக்குச் சென்று பரவச் செய்வதற்காக இந்த ஜன்மம் எடுத்தவராகையால், கேம்பிரிட்ஜுக்குப் போக இவர் பிரியப்படவில்லை. 1900-ம்வருஷத்தில் காட்டுக்குச் சென்று தவம்புரிந்து ஒரு வருஷத்துக் கெல்லாம் சந்நியாசி யாசிரமம் பூண்டார். இவர் ஹிந்தி, உருடு, ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், பார்ஸி இந்த பாஷைகளில் ஒவ்வொன்றிலும் பாண்டித்திய முடையவர். வேதத்தை நன்றாய்ப் படித்து ஒவ்வொரு ரிக்கிலும் ஒவ்வொரு வார்த்தையின் தாத்பரியத்தையும் நன்றாய்ச் சிந்தனை செய்து பரிசோதித்து அறிந்தவர். தற்காலத்திய சாதாரண கனபாடிகள், சடாவல்லவர்களைப் போல வேதத்தை அர்த்தம் தெரியாமல் உருப்போட்டவரல்லர். அமேரிக்காவில் அவரிருந்த இரண்டு வருஷங்களுக்குள் அந்தத் தேச பாஷையிலுள்ள கிரந்தங்களைப் படித்து நிபுணரானார். இவர் ஸ்ரீசங்கரர், கபிலர், கணாதர், கௌதமர், பதஞ்சலி, ஜைமினி, வியாசர், கிருஷ்ணபகவான் இவர்களுடைய தத்துவ தரிசனங்களைப் படித்து ஆராய்ச்சி செய்தார். மேற்றிசைத் தத்துவசாஸ்திரங்களில், காண்ட், ஹேகெல், கோயெதி, பிட்ஸ், ஸ்பைனோஸா, காம்டீ, ஸ்பென்ஸர், டார்வின், ஹாக்கேல், டிண்டேல், ஹக்ஸ்லீ, ஸ்டார், ஜார்டன், புரோபஸர் ஜேம்ஸ், இவர்களின் கிரந்தங்களையும் படித்துத் தெரிந்து கொண்டவர்.

அவர் எப்பொழுதும் புன்சிரிப்புள்ளவர். ஒருவன் அவரெதிரில் வந்து அவரைப் பார்ப்பானானால், அவன் எண்ணங்கள் எவ்வளவு இழிவானதாயும் அற்பத் தன்மையாயு மிருந்தாலும் அவைகள் அவன் மனத்தை விட்டு ஓடிவிடும். அவன் மனம் பரமாத்மாவினிடம் கொண்டுபோகப்படும். அவன் மனதில் புதிதாகப் பெருந்தன்மையான எண்ணங்களும் உணர்ச்சிகளும் உண்டாகும். அனுதாபங்கள் (Syampathies) அதிகப்படும். அவருடன் கொஞ்சம் சம்பாஷணைசெய்த மாத்திரத்தில், ஜீவன் பரமாத்மாவின் அம்சம் என்ற நம்பிக்கை ஸ்திரப்படுவதுடன் இவன் மனமும் சஞ்சலத்தை விட்டுச் சமாதானத்தையடையும். மனதிலுள்ள சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாய்விடும். அவர் சிரிப்பானது மின்னல்போல ஜ்வலிக்கும். அவர் அன்பு நிறைந்தவர். கீழானோர், மேலானோர் என்ற வித்தியாசமின்றி எல்லாரையும் சமதிருஷ்டியாய்ப் பார்ப்பவர், ஸ்தாவர ஜங்கமம் என்ற வித்தியாசமின்றி புஸ்தகம், காகிதம், பென்சல், பேனா, மரம், பக்ஷி, மிருகம் இவைகளைப்பார்த்து அவைகளுடன்

அவர் சம்பாஷணை செய்து ஆனந்தத்தை அனுபவிப்பர். எல்லா வஸ்துவையும் பரமாத்மாவாகப் பாவிப்பார். உருடு, பார்ஸி இந்த பாஷைகளில் இவர், சிலபாடல்களை மிகுந்த உருக்கத்துடன் பாடுவார். அப்படிப் பாடுகையில், அவர் தேகந்தெரியாமல் பரமானந்தத்தில் மூழ்கிவிடுவார். பொதுவாக அவர் உபந்நியாசம் செய்கையில் "ஓங்கார"த்தை உச்சரிப்பார். அப்படி உச்சரித்தவுடன் தேகந்தெரியாமல் நிஷ்டையிலிருந்துவிடுவார். அவ்விடத்தில் எப்பொழுதும் பரமாத்மா நினைவு தவிர வேறு நினைவு கிடையாது. அமெரிக்கா தேசத்தார்கள் அவருக்கு தேகம் ஒன்றிருப்பதாக அவர்நினைவில் காணவில்லையென்று சொல்வார்கள். அவர் பார்வையினால் எதிரிலிருப்பவன் மனம் அன்பு நிறைந்ததாக ஆகிவிடும். கல் நெஞ்சும் கரைந்துவிடும்.

அவர் ஜப்பான், எகிப்து, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்று உபந்நியாசம் செய்ததில், ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு மதஸ்தர்களும், அவரவர், தங்கள் தங்கள்தேசம் மதங்களைச் சேர்ந்தவரென்று சொன்னார்களே தவிர, இந்தியாவிலிருந்து வந்தவர், ஹிந்துமதத்தைச் சேர்ந்தவரென்று ஷை தேசத்தார்களில் ஒருவரும் அவரைப் பாவிக்கவில்லை. ஜப்பான் தேசத்தார், இவர்தான் இந்தியாதேசத்தின் யதார்த்த தத்துவ சாஸ்திரி யென்று சொன்னார்கள்.

அவர் உபந்நியாசத்தில் அநேகம் கதைகளைத் திருஷ்டாந்தமாக எடுத்துச்சொல்லி, கேட்கிறவர்களின் மனதில் தெளிவாய்ப் பதியும்படி சொல்வார். ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியபாவத்தைப் பற்றி ஜனங்களின் மனதில் தெளிவாய்ப் படும்படியாக எடுத்துச் சொல்வார். ஒவ்வொருநாளும் அவர் உபந்நியாசம் புதிதாகவேயிருக்கும்.

அமெரிக்காவிலிருந்து இந்தியாதேசத்துக்கு அவர்வந்தவுடன் அவரை ஒரு சங்கம் ஏற்படுத்தும்படி சொன்னார்கள். இந்தியாவில் பரவிக் கொண்டிருக்கும் வர்ணாச்ரம தர்மத்தை நீக்க வேண்டுமென்பது அவர் உட்கருத்து. ஒரு சங்கம் ஏற்பட்டால் உண்மை தெளிவாய் அறியப்படுமென்றாலும், அந்தச் சங்கத்தினாலுண்டாகும் நன்மையைக் காட்டிலும் தீமை அதிகமென்றும், சங்கமில்லாமலிருப்பது நலமென்றும் சங்கத்தை யுண்டாக்கி அதில் சேருவதான பந்தத்துக்கு உட்படக் கூடாதென்றும், ஸ்வேச்சையாயிருப்பது நலமென்றும் சங்கத்தின் மூலமாய்த் தெரிந்து கொண்டாலும் மற்ற விதமாய்த் தெரிந்து கொண்டாலும் உண்மை உண்மை தான் என்றும், தன்னு

டைய இஷ்ட தேவதையான பாரத பூமியின் தானியம் உப்பு இவை களைத் தின்று தங்கள் தேகத்தை வளர்த்துவரும் கிறிஸ்துவர்கள், ஹிந்துக்கள், பார்சிக்கள், ஆரியசமாஜிகள், சீக்கர்கள், மகமதியர்கள் இவர்களெல்லாரும் தன்சகோதரர்கள் என்றும், தான் எல்லாரையும் தழுவுகிறவரென்றும், ஒருவரையும் விலக்குகிறவர் அல்லரென்றும், தான் அன்பு நிறைந்தவரென்றும், அந்த அன்பு எல்லாவற்றிலும் பாவிக் கொண்டிருப்பதாயும், தான் எல்லாரையும் நேசிப்பதாகவும் சொல்லி சங்கம் ஏற்படுத்தச் சொன்னவர்களை சமாதானப் படுத்தி விட்டார். உண்மையை எடுத்து உணர்த்தும் ஒவ்வொருவரையும் இராமர் என்பார். இவர் எப்பொழுதும் தன்னை "நான்" என்று சொல்லாமல் 'இராமர் சொல்லுகிறார், இராமர் நினைக்கிறார்' என்று சொல்லிவருவார். மகம்மது நபி (Mohamed) கிறீஸ்து நாதர் (Christ) ஸ்ரீகிருஷ்ணபகவான் (Sri Krishna) இவர்களை யெல்லாம் இராமர் என்றேபேசுவார். சாதாரண ஜனங்களுக்கு தத்துவத்தை உபதேசிப்பதில் உற்சாக முள்ளவர். அவர் அநேக விடங்களில் செய்திருக்கும் உபந்நியாசங்களைப் படித்தால்தான் அவைகளின் உயர்வும் அதினால் உண்டாகும் உற்சாகமும் வெளியாகுமே தவிர, சுருக்கமாய் அவர் விஷயம் எழுதப்பட்டிருக்கும் இந்த வியாசத்தில் அந்த உபந்யாசங்கள் ஒவ்வொன்றினுடையவும் கருத்தைக்கூட எடுத்துச்சொல்ல சாத்தியமில்லை.

அவர் ஜீவதசையிலிருந்த 33-வருஷத்தில், விவரம் தெரியாத அதிபாலியதசை தவிர மற்றக் காலங்களில் ஒரு நிமிஷத்தையாவது வீணாகப்போக்கினாரென்று சொல்லமுடியாது. அவர் சித்தி அடைந்த காலத்தில் சொன்னதாவது "ஓ! யமதர்மராஜாவே! உமக்கு இஷ்டமானால் இந்தச்சரீரத்தை எடுத்துக் கொள்ளும். எனக்கு அதில் கவலையில்லை, என் உபயோகத்துக்கு எத்தனையோ சரீரங்களிருக்கின்றன."

என் அநுபவத்தில், ஒரு மனிதனுக்கு யதார்த்தமாக சுகம் ஏற்பட வேண்டுமானால் மனச்சமாதானம் உண்டாகவேண்டும். மனச்சமாதானம் இப்பேர்க் கொத்தவர்களின் சரித்திரத்தை வாசித்து, அவர் சொல்லிய விஷயங்களை மனதில் தியானித்து சிந்தித்து அநுபவத்திற்குக் கொண்டு வந்தால் உண்டாகுமே தவிர வீண்விவகாரங்களில் காலத்தைக்கழித்தால் மனச்சமாதானம் உண்டாகாது. ஓம்தத்ஸத்.

கே. எஸ். ராமச்சந்திரையர்.

# வருங்கால லக்ஷ்யங்கள்.*

## (Ideals of the Future)

### முகவுரை.

---

இப்போது நடைபெற்றுவரும் உலகப்பாங்கை (Civilization) மாற்றி நூதனமாக ஒருநற்பாங்கை ஏற்படுத்துவதாயிருந்தாலும்சரி, அதற்கு அடிப்படையாக இருக்கவேண்டிய குணகணங்களை ஆராய்ச்சி செய்வதாயிருந்தாலும் சரி, அப்படிச்செய்கிறவர்கள் எந்த அம்சங்களில் மாற்றவேண்டியது, எப்படி மாற்றவேண்டியது என்பதைப்பற்றி முன்னமே தங்களுடைய மனதில் தெளிவாக ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். கட்டிடவேலையில் எப்படி ஒரு சிற்பியுடைய கல்பனையானது (Plan) பிற்பாடு கொற்றனுக்கு உபயோகப்படுகிறதோ, அப்படியே அந்த சங்கல்பமானது பிற்பாடு அந்த நற்பாங்கை நடைபெறச்செய்யப் பிரயத்தினப்படுகிறவர்களுக்கு உபயோகப்படுகிறது. எந்தக் காரியத்தைச் செய்வதாயிருந்தாலும் அதை இன்னபடி முடிக்கிறதென்ற ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டு அந்த முடிவை உத்தேசித்து வேலை செய்தால்மட்டிலும் அந்தக்காரியத்தை ஒழுங்காகவும் பிரயோஜனகரமாகவும் முடிப்பது ஸாத்தியமாகும் என்பது எப்போதும் யாரும் ஒத்துக்கொள்ளக்கூடியது. ஒரு தச்சன் இன்னசாமான் செய்யப்போகிறோம் என்கிற தீர்மானமில்லாமல் மரத்தைச்செதுக்க ஆரம்பிக்கமாட்டான். உளிபோனவிடமெல்லாம் மரத்தைச் செதுக்கிவிட்டு இன்னசாமான் செய்கிறதென்று பிற்பாடுதீர்மானிப்பானானால், ஒருகால் அவன் ஏற்கனவே செதுக்கியெறிந்தபாகம் வேலைக்கு அவசியமானதாக ஏற்பட்டு, அந்த பாகம் இல்லாமல் அந்தமரம் அந்தவேலைக்கு உபயோகமில்லாமலே போய்விடக்கூடும். ஆகையால்தான் உளியை மரத்தில் நாட்டுவதற்குமுன்னமே, இன்னவேலை செய்யப்

---

* Herald of the Star (நக்ஷத்திர தூதன்) என்னும் ஆங்கிலப்பத்திரிகையின் 1914-ஞு ஜனவரி ஸஞ்சிகைக்கு மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளால் எழுதப்பட்ட வியாசத்திலிருந்து தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

வி. விசுவநாதையர்.

போகிறோமென்று தீர்மானித்துக்கொள்ளுகிறான். அதுபோலவே ஏதாவது ஒருஸபையை ஸ்தாபிப்பவர்கள் இன்ன நோக்கத்தை ஸ்தாபிப்பதற்காக ஸபையை ஸ்தாபிக்கிறோமென்று முன்னமே தீர்மானித்துக்கொண்டு அதற்குத் தகுந்தபடி பிற்பாடு ஏற்பாடுசெய்கிறார்கள். அதேமாதிரி ஒரு உலகப்பாங்கை எதிர்பார்க்கிற நாமும் அதைச் சிறுகச்சிறுக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயற்சிசெய்ய ஆரம்பிப்பதற்குமுன், நம்முடைய நோக்கம் இன்னதென்றும் அதன் பொருட்டு இன்ன மாறுபாடுகளும் சீர்திருத்தங்களும் செய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது அவசியமல்லவா?

அவ்விதமான ஒருதீர்மானத்துக்கு வருவதிலும் அந்தத் தீர்மானம் நடைபெறுமாறு முயற்சி செய்வதிலும் உபகாரமாக விருக்கும் என்று எண்ணிப் பின்வரும் வியாசங்களை நான் எழுதலானேன். அதிற்கண்ட என்னுடைய அபிப்பிராயங்களை மற்றவர்கள் பேசித் தெளிந்து உசிதமாகப்பட்டால் மாத்திரம் அங்கீகரிக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையேதவிர, அவைகளை ஆராய்ச்சி செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதில்லை.

ஸநாதன தர்மங்கள் எந்த ரூபமாக இனி வெளியிடப்படுமென்பது இனி அவதரிக்கப்போகிற ஜகத்குருவுக்குத்தான் தெரியக் கூடியது. இனிவரப்போகிற உலகப்பாங்குக்கு ஆதாரமான அடிப்படைகளை அமைக்கும்வேலை வைவஸ்வத மனுவைச்சேர்ந்தது. ஆகையால் அதன் லக்ஷ்யங்களை†ப்பற்றி நம்முடைய புத்திக்குட்பட்ட மட்டிலும் வணக்கத்துடன் நாம் எழுதத்துணியலாமேயொழிய இன்னபடிதான்என்று எல்லைகட்டி நம்மால் எப்படிச் சொல்லலாகும்! அவருடைய சங்கல்பத்தின்முன் எதுதான் எதிர் நிற்கமுடியும்! புடமிடு

† லக்ஷ்யம் – எக்காரியத்தையும் நாம் செய்ய முயலுவதற்கு முன் நாம் கொள்ளவேண்டிய முன் நோக்கம். அதாவது, ஸத்யம் பேசுவதில் ஹரிச்சந்திரனைப் போலவும், ஸகோதர பாவத்தில் பரதனைப்போலவும் ஆகவேண்டுமென்று நம்முடைய எண்ணம் அல்லது முன் நோக்கம் இருந்தால் அதற்குத்தான் லக்ஷ்யமென்று பெயர்.

வோனுடைய நெருப்புப்போல் தன்னுடைய லக்ஷ்யங்களாகும் தங்கத்தோடு கலந்திருக்கும் கல்மஷங்களை எரித்துவிடுவார். வண்ணானுடைய சவர்க்காரம்போலத் தன்னுடைய லக்ஷ்யங்களாகும் சுத்த வெண்மையுடன் கலந்திருக்கும் அழுக்குகளை அழித்து விடுவார். பின்வரும் வியாசங்களில் நான் விவரித்திருக்கும் லக்ஷ்யங்களை இப்போதைக்கு என்சிற்றறிவுக்கு எட்டினமட்டிலும் எழுதியிருக்கிறேன். என்னைக்காட்டிலும் அறிவிலும் யோக்கியதையிலும்மேலானவர்கள் அவைகளில் எதையாவது திருத்துவார்களேயானால்அதை வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ள எப்போதும் சித்தமாயிருக்கிறேன்.

லக்ஷ்யங்கள் என்றால் என்னவென்று தெளிவாய்த் தெரிந்துகொள்வோம். அது ஸத்யமும் நித்தியமுமான எண்ணங்களடங்கிய ஒரு மனோபாவம். அது நாம் நடக்கவேண்டிய வழியைக் காட்டக் கூடியது. ஸ்திரமில்லாமலும் சஞ்சலமாயும் இருக்கிற எண்ணங்கள் லக்ஷ்யங்களாக உதவா! ஸத்தியமாயும் நித்தியமாயும் உள்ள எண்ணங்கள் மாத்திரம்தான் லக்ஷ்யங்களாக அமையக்கூடும். அவைகள் இடைவிடாமல் நம்முடைய மனதைக்கவர்ந்து நம்முடைய ஒழுக்கங்களை நல்வழிப்படுத்தக் கூடியவைகளாக விருக்கவேண்டும். ஸத்யமில்லாத எண்ணம் நித்யமாய்விட்டால் அந்த எண்ணமே நம்மிடம் குடிகொண்டு நமக்குக்கேட்டை விளைவிக்கும். அந்த மனோநிலையிலிருந்து பைத்தியமுண்டாகும். ஸத்தியமான எண்ணங்கள் ஸ்திரமானால் அவைகள் நம்மை ஈசுவர சங்கல்பத்தை ஒட்டி லக்ஷ்யம்தவறாமல் நடக்கும்படி செய்வதுமன்றி நம்மை மஹானுபாவர்களாக்கி ஸத்யத்தைவிட்டுச் சிறிதும் விலகாதபடி செய்கின்றன. ஆகையால் நாம் எதை லக்ஷ்யமாகக் கொள்ளவேண்டும் என்று தீர்மானிப்பதில் ஜாக்கிரதையாகவும் நிதானத்துடனும் ஆலோசிக்கவேண்டும். ஏனென்றால் நம்முடைய லக்ஷ்யங்களுக்குத் தக்கபடிதான் நம்முடைய ஒழுக்கங்களும் ஏற்படும்.

பின்வரும் வியாசங்கள் அடியிற்கண்ட லக்ஷ்யங்களைப்பற்றி எழுதப்படும். அவையாவன:—

1 மதம் (Religion)
2 பிரத்தியேகத்துவம் (Individuality)
3 கூட்டுறவு (Society)
4 ஸ்வாதந்திரியம் (Liberty)
5 தர்மம் (Duty)
6 பயிற்சி (Education)
7 சாஸ்திரவித்யை (Science)
8 கலாஞானம் (Art)
9 ராஜத்துவம் (Kingshp)
10 பிரதிகாரம் (Representation)
11 தொழில் (Industry)

உலகப்பாங்கு உயர்நலம் வாய்ந்ததாகச் செய்வதற்கான இது போன்ற இன்னும் அநேக விஷயங்கள் ஸம்பந்தமான லக்ஷியங்களை எடுத்தெழுதலாம், ஆனால் நக்ஷத்திர தூதன் (Herald of the Star) என்னும் பத்திரிகையைப் படிப்போர்கள் மேலேகண்ட சிலஅம்சங்கள் ஸம்பந்தமான லக்ஷியங்களைப் படித்து ஆராய்ச்சி செய்வார்களேயானால் அந்த வியாஸங்களை எழுதின என்னுடைய மனோரதம் ஸபலமாகும்.

அன்னி பெஸண்டு.

---

## நன்மொழி.

---

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்துமயங் காதீர்
வையகத்தே யுறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்கையதே வாழ்க்கையென மதித்ததனைப் பெறவே
மெய்யகத்தே விரும்பியிங்கே வந்திடுமி னெனது
மெய்ப்பொருளாந் தனித்தந்தை யித்தருணந் தனிலே
செய்யகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
சித்தாடல் புரிகின்றார் திண்ணமிது தானே.

---

புவர்லோக ஜீவியத்தைப்பற்றிய இரண்டொரு விஷயமுண்டு. அதனையறிந்துகொள்ள முயலுவதில் புவர்லோகத்தில் ஒருவருக்கொருவர் தங்கள் மனோபாவங்களைத் தெரிவித்துக்கொள்ளும் முறையொன்று. இதை இன்னவிதமென்று பூலோகத்தில் தெரிந்துகொள்வது கஷ்டமே. இங்கே சாதாரணமாய் வழங்கும் சப்தம் அங்கே சாத்தியமாகாது. உண்மையில் பூலோகத்தின் உயர்ந்த பாகத்திலேயே இந்தச் சத்தம் சாத்தியமாவதில்லை. ஒருவன் ஸ்தூல பிரபஞ்சத்தின் வாயு மண்டலத்திற்குமேல் ஆகாயப்பிரதேசத்தை யெட்டியவுடனே, நாம் அறிந்துள்ள சத்தம் அவனுக்குக் கொஞ்சமேனும் சாத்தியமாகாது. ஆயினும் "சத்தம்" என்னுங் குறிப்புமாத்திரம் உயர்வான நிலையில் வழங்கி வருகின்றது. தமது சப்தத்தினல் ஈசுவரன் உலகங்களைச் சிருஷ்டித்தாரென்னும் விஷயம் கிரந்தங்களில் மலிந்திருக்கின்றது.

நித்திரையில் நாம் ஒரு நண்பனைச் சந்தித்தோ, அல்லது ஒரு பிரசங்கத்தில் சமுகமாயிருந்தோ சில விஷயங்களைக் காதால் கேட்டதாகவும், நாமும் பூலோக வழக்கப்படி பேசியதாகவும் காலையில் நினைவிற்கு வருவதுண்டு. அது சரிதான் என்றாலும், சம்பாஷணையின் முறை அவ்விதம் நடக்கவில்லை. நாம் ஞாபகத்தை ஸ்தூல மூளைக்குக் கொண்டுவரும்பொழுது, இயற்கையாய் அதை இங்கே வழங்கும் வார்த்தைகளால் விவரிக்கிறோம். புவர்லோக பாஷை மனோசங்கற்பத்தால் அல்ல, மற்றென்னவெனில், சங்கற்பத்தைக் குறித்தவ்கையில் மற்றவர்களுக்கு வியக்தப்படும்படி, ரூபமாக வெளிப்படுத்துவதாம்.

சுவர்லோகம் அல்லது மனோலோகத்தில், ஒருவன் தனது எண்ணத்தை வார்த்தைகளால் விவரியாமல், உடனே அதையப்படியே மற்றொருவனுடைய மனதிற்கு அனுப்பிவிடுகிறான். ஆதலின் அங்கே பாஷை வேண்டுவதில்லை. இன்னும் தங்கள் மனோசரீரத்தை யுபயோகிக்கும் வல்லமைபெறாத புவர்லோக உபகாரிகள் புவர்லோக சாதனங்களைக்கொண்டே வேலை செய்யவேண்டும். புவர்லோக பாஷையென்பது சுவர்லோக சங்கற்பமுமல்ல. பூலோகவார்த்தைகளுமில்லை. இவ்விரண்டிற்கும் இடையேயுள்ளது. எண்ணத்தை

வார்த்தைகளுக்குப் பதிலாக, ஓர் வகை ரூபமாக்கி உபயோகித்தலே புவர்லோக பாஷை. இதனால் புவர்லோகத்தில் சம்பாஷிக்கும் மனிதனும் அதைக் கேட்பவனும் இருவர்க்கும் தெரிந்த ஒரு பொதுப் பாஷையில் சம்பாஷிக்க வேண்டும். ஆதலின் ஒருவன் எத்தனை பாஷைகளை பூலோகத்தில் கற்றிருக்கிறானோ அவ்வளவிற்கு புவர்லோகத்தில் பிரயோஜனமாகிறான்.

இவ்வித கஷ்டங்கள் மஹாத்மாக்களின் சிஷர்களுக்கில்லை. அவர்கள் வேண்டிய தருணங்களில் புதிய சரீரத்தை யுண்டாக்கிக் கொள்ளக் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்தூல சரீரத்தோடு புவர்லோக சரீரத்தையும் விட்டு, மனோசரீரங்களில் அவர்கள் பிரயாணஞ் செய்வார்கள். புவர்லோகத்தில் உதவிசெய்யவேண்டிய நேரத்தில், சுற்றியுள்ள புவர்லோகப் பிரகிருதியால் ஒரு சூக்ஷ்ம சரீரம் உண்டாக்கிக்கொள்ளுகின்றனர். இவ்வித முறையில் கற்பிக்கப்பெற்ற யாவரும் சங்கற்பத்தை மற்றொருவருக்கு நேராக அநுப்பத் தக்கவராம். இது சுவர்க்கலோக முறை. ஆனால் இவர்களின் சங்கற்பத்தை கிரகிப்பவனுடைய சூக்ஷ்ம சரீர வளர்ச்சிக்கும், அவனை இவர்கள் விளங்கிக்கொண்ட அளவிற்கும் தக்கபடி இவர்களின் உதவி அவனுக்குப் பயனாகும்.

இவ்விதமான பயிற்சிபெற்ற சிஷர்களையன்றி, மனோசரீரத்தில் பிரக்ஞையொடு வேலைசெய்யும் சொற்ப மனிதருமுண்டு. இவர்களுக்கு அது, நீண்டகால யோகாப்பியாசத்தாலும், விசேஷ முயற்சியாலும் உண்டாயிற்றென்க. சுவர்க்கலோகத்தில் ஒருவன் தனது எண்ணங்களாலான கவசத்தால் தன்னை மூடிக்கொள்ளுகிறானென்றும், அந்த எண்ணங்களாகிய வாய்க்கால்களின் வழியே சுவர்க்கலோக ஜீவியம் அவனை இயக்கக்கூடுமென்றும் அறிகிறோம். ஆனால் இவ்வித மனிதனை சுவர்க்கலோகத்தில் வேலை செய்பவனாகச் சொல்வதற்கில்லை. சுவர்க்கலோகத்தில் தாராளமாய் சஞ்சரித்து, அங்குள்ளவற்றைப் பார்ப்பவனே சுவர்க்கலோகத்தில் வேலைசெய்பவன்.

சவர்க்கலோகப் பிரகிருதியின் தன்மை புவர்லோகப் பிரகிருதி போன்றதன்று. நமது புவர்லோக (அதாவது சூக்ஷ்ம) சரீரத்தில் புவர்லோகப் பிரகிருதியும், இனி பூலோகத்திலிறங்கி கல் முதலான

ஜன்மமெடுக்கவேண்டிய காமஜீவ அம்சமும், கலந்திருக்கின்றன. அதற்கு (Desire Elemental) டிசையர் எலிமெண்டல் என்று பெயர். ஒரு வஸ்திரத்தின் குறுக்கிழையும் நெடுக்கிழையும்போல, நமது சூக்ஷ்மசரீரமாகிய வஸ்திரம் புவர்லோகப் பிரகிருதியாலும் எலிமெண்டல் எஸ்ஸென்ஸினாலும் நெய்யப்பெற்றுள்ளது. எலிமெண்டல் எஸ்ஸென்ஸ் காமஜீவ அம்சத்தைச் சேர்ந்தது. அதை விட்டு மனிதன் தன்னைப் பிரித்துக்கொள்ள முடியாதாயினும் தாழ்ந்த இச்சைகளுக்குப் பதிலாக சுப இச்சைகளால் புவர்லோகத்தின் உயர்வான பிரகிருதியைத் தன்னிடம் ஆகர்ஷித்தலைக்கொண்டு மேற்சொன்ன காமஜீவ அம்சத்தின் பலத்தைக் குறைத்து, ஜீவாத்மாவின் தத்துவம் பலம்பெறச் செய்யலாம். சாதாரண மனிதன் இறந்தால், அவன் புவர்லோக முழுவதையும் பார்க்கக்கூடாமலும், முழுவதிலும் சஞ்சரிக்கக்கூடாமலும் அவனைத் தடுப்பது இந்த காமஜீவ அம்சமேயாம். அதனால் அவன் புவர்லோகத்தின் ஒவ்வொரு உட்பிரிவிலும் ஒவ்வொரு கோசத்தால் கட்டுண்டு, கொஞ்சங்கொஞ்சமாய் ஒவ்வொன்றாக அந்தக் கோசங்கள் கழிந்தபின் விடுபட்டு மேலே செல்லுகிறான். அவன் இவ்விதக் கோசங்களிலொன்றிலிருக்கும்போது, அது சம்பந்தமான பாகத்தை மாத்திரமே பார்க்கக்கூடியவனாயிருக்கிறான். இவ்வித நிர்ப்பந்தம் சுவர்க்கலோகத்திலில்லை. ஆனால் மனோ சரீரத்திலுள்ள எலிமெண்டல் எஸ்ஸன்ஸ் சதா சலித்துஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்திற்கு நமது எண்ணத்தைப் பாயச்செய்கின்றது.

ஒருவன் சுவர்க்கலோக (அதாவது மனோ) சரீரத்திலிருந்து வேலைசெய்யும்போது, தனது சூக்ஷ்ம சரீரத்தையும் ஸ்தூல சரீரத்தோடு விட்டுப்போகிறான். அவனுக்கு அவசியமானால், வெளியிலிருந்து அந்த சூக்ஷ்ம சரீரத்தில் தீய சலனங்கள் பிரவேசியாதபடி அதைச்சுற்றிலும் ஒரு கவசத்தை இலகுவாய் அமைத்து விடுகிறான். அல்லது அத்தீய சலனங்களைத் தடுக்கத்தக்க ஒரு நேர்மையான சலனத்தை சூக்ஷ்ம சரீரத்தில் எழுப்பிவிடுவான். காலப்போக்கில் ஈசுவர தியானத்தினாலாவது, குருமூர்த்தியின் தியானத்தினாலா-

வது, எந்த மனிதனும் ஸ்தூல சரீரத்தைக் கழற்றி புவர்லோகத்திற்கும் பின்பு சுவர்க்கலோகத்திற்கும் உயரக்கூடும். ஆனல் எவ்வளவு காலத்தில் அவ்விதம் உயருவானென்று ஒருவராலும் சொல்லக்கூடாது. ஏனென்ருல், அது அப்பியாசியின் பூர்வ நிலைமையைப் பற்றியதாம்.

எந்த மனிதனும், இறந்தபின்பு புவர்லோகத்தி லிருக்கும்போது, கற்க ஆரம்பித்தலும் புதிய மனோபாவங்களை யடைதலும் கூடும். புவர்லோகத்தில் முதன் முறையாக பிரஹ்மக்ஞான விஷயங்களைக் கற்ற ஜனங்களை அறிந்துள்ளேன். அங்கே ஒரு ஸ்திரீ முதன் முதல் சங்கீதங் கற்றுக் கொண்டதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனல் இது அசாதாரணம். ஒருவேளை அவளுக்கு இறந்த மனிதனொருவன் சங்கீதங் கற்பித்திருக்கலாம். அன்றேல் அவள் புவர்லோக வாசியானபோது பூலோகத்தில் ஜீவித்திருந்த ஒரு சங்கீத வித்வானே தனது நித்திரையின்போது, புவர்லோகத்தில் அந்த ஸ்திரீக்கு சொல்லிக்கொடுத் திருக்கலாம். புவர்லோகத்தில் அந்த லோக வாத்தியக்கருவிகளால் கானஞ்செய்வதாக ஜனங்கள் தவருய் நினைக்கிருர்கள். மற்றென்னவெனில், தங்கள் சங்கற்பத்தால், சப்தமென்று பாவிக்கத்தக்க சலனங்களை யங்கே யுண்டாக்குகிருர்கள். சங்கீத சம்பந்தமுள்ள ஒருவகைத் தேவர்களுண்டு. சங்கீதத்தில் அளவற்ற விருப்பமாய், அதனை முதல் முதல் பயில விரும்புவோர்க்கு சிலசமயங்களில் அத்தேவர்கள் சொல்லிக்கொடுப்பதுமுண்டு.

ஒரு பிரஹ்மக்ஞானி (தியாஸபிஸ்டு) புவர்லோகத்தில் கைங்கர்யஞ்செய்ய விரும்புகிருன். அதனல், அவன், தன்னை காமஜீவ அம்சத்தின் (டிசையர் எலிமெண்டலின்) கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்கிக்கொள்ளான். அவன் புவர்லோக உட்பிரிவுகள் எல்லாவற்றிலும் தாராளமாய் சஞ்சரிக்க வேண்டியவனுபிருக்கிருன். ஒருவன் தனது சூக்ஷ்ம சரீரத்தை புவர்லோகத்தின் கீழான பிரகிருதிக்கு அநுகுணமாய்ச் சலிக்கவிடாமல் நேர்மையாய்த் தடுப்பானுயின், அந்தத் தடித்த பிரகிருதி, கிரமமாய் சூக்ஷ்ம சரீரத்தை விட்டு நீங்கி, அந்தச்சரீரம் நன்ருகும், அதனல் காமஜீவ அம்சம் செயல் குறைந்ததாகும்.

இறந்தபின் காமஜீவ அம்சம் ஏற்படுத்தும் கட்டுப்பாடுகளைத் தடுப்போனுக்கு, அது, ஒரு பயங்கர வுணர்ச்சியை விளைக்கின்றது. ஆதலின், இவ்வித விஷயங்களை ஒருவன் மரிக்குமுன்பே அறிந்திருத்தல் அவசியமென்பதற்கு இதுவும் ஒரு காரணமாம்.

புவர்லோகத்தில் ஒருவன் தூங்கவேண்டிய அவசியமில்லை. ஜீவாத்மா சூக்ஷ்மசரீரத்தால் தாராளமாய் வேலை செய்வதற்காகவும் பகலெல்லாம் வேலைசெய்து களைத்த ஸ்தூல கருவி கரணங்கள் சாவதானமாய் யதா நிலையை யடையும்படியாகவும், பூலோகத்தில் தூங்குகிறோம். புவர்லோகத்தில் களைப்பும் இல்லை. புவர்லோகவாசம் முடிந்து, சூக்ஷ்ம சரீர சக்திகள் தளர்வதை, ஒருவேளை களைப்பென்று சொன்னால் சொல்லலாம்.

புவர்லோகத்திலும் மறந்து போவதுண்டு. பூலோக சம்பவங்களின் தொடர்ந்த ஞாபக மில்லாமையாகிய வெகு சாதாரண மறதியைப்பற்றி நான் இங்கே சொல்லவரவில்லை. வேறென்னவெனில் ஒருவன் சென்ற இரவில் அல்லது சென்ற வருஷத்தில் செய்தவற்றுள் சிலவற்றை மறந்து போகிறானென்பதாம். உண்மையாகவே பூலோகத்தைவிட புவர்லோகத்தில் மறத்தல் ஸாதாரணம். ஏனெனில் அந்த லோகம் அவ்வளவு பரபரப் புள்ளதாயும், ஜன நெருக்க முள்ளதாயும் இருக்கின்றது.

ஒருவனைப் புவர்லோகத்தில் அறிவதற்கு, அவனைப் பூலோகத்தில் அறிந்திருக்கவேண்டிய அவசியமில்லை. உதாரணமாய், பிளவாட்ஸ்கி அம்மையாரவர்கள் புவர்லோகத்தில் தமது புதிய சூக்ஷ்ம சரீரத்தோடு மிகவும் நன்றாயிருத்தலை எங்களில் அநேகர் பார்த்திருக்கிறோம். ஆயினும் அவ்வம்மையாரை ஒருவரேனும் ஸ்தூலத்தில் காணவில்லை, அவர் தமது புதிய சரீரத்தை இப்போது பொதுவாய் உபயோகிக்கினும், அடிக்கடி தமது பழைய உருவத்தையும் உபயோகிக்கிறார்.

அ. நம்மாழ்வார்.

212

## என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

(193-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவன் பின்னும் முற்றிலுமே உறுதியாயிருப்பானென்று அவருக்குத்தோன்றினலப்போது, அப்பியாசி நிலைமைக்கு அவன் தகுந்தவனுவென்று அவனைப் பரிசோதிப்பார். முற்றிலும் தன்னுல் அங்கீகரிக்கப்பட்ட சிஷனெருவனைக் குருநாதன் தன்னுடன் அதிக நெருக்கமான சம்பந்தத்தில் வைத்துக்கொள்வதால் அவனடைந்திருக்கும் யோக்யதை அதிக உயர்வானதாகவிருக்கவேண்டும். ஆகையினுலேயே அவர் ஒருவனை நீண்டகாலம்வரை பரீக்ஷித்துப் பார்க்கிருர். குருநாதன் ஒருவனைத் தன்னுடைய ஒருபாகமாக வேற்றுக்கொள்வதற்கு முன், எந்தெந்த எண்ணங்கள் எந்தெந்த உணர்ச்சிகள் தன்னிடமிருக்க அவர் இடம் கொடுக்க மாட்டாரோ, அப்பேர்ப்பட்ட தொன்று மவனிடமிருக்கக்கூடாது. அக்குணங்கள் அவர் வெறுக்கிருர் என்பதற்காகவல்ல, அவைகள் அவ்ருடைய காரியங்களுக்குத் தடையாகும். சிலசமயங்களில் அங்கத்தினர்களிலொருவர் "நான் கைங்கர்யங்களைப் புரிவதற்கு மனப்பூர்வமான ஊக்கமுள்ளவனுகவும் கவலையுள்ளவனுகவு மிருக்கிறேன். அநேக வருடங்களாக அதன் பொருட்டு வேலைசெய்தும் படித்தும்வருகிறேன். ஏன் என்னைக் குருநாதன் அப்பியாசியாக ஏற்றுக்கொள்ளக் கூடாது," என்று சொல்லுகிருர்.

நாங்களவருக்குச் சொல்லக்கூடிய பதில் ஒன்றேதான். அஃதென்னவெனில் "என்னுடைய அருமையான ஐயா! நீர்தான் அதைத் தெரிந்துகொள்ள வேண்டியவர். குருநாதனுடைய காரியங்களைத் தடுக்கும் குணங்கள் உம்மிடத்தில் என்னவிருக்கின்றன? அன்றியும் குருநாதன் ஏன் ஒருமனிதனை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்னும் கேள்விக்குப்பதிலாக, ஏன் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அவ்வித உயர்ந்த கௌரவத்துக்கு அவன்பாத்திரனுகத்தகுந்த நற்குணங்கள் அவனிடமிருப்பன யாவை? என்றும் கேளும்," என்பதுதான்.

ஆனால் நான் மேற்சொன்னபடி ஒருமனிதன் சிலவருடங்கள் வரை நன்றாகவேலை செய்துவந்து அவன் பின்னும் அவ்வழியிலேயே உறுதியாகவும், பக்தியுள்ளவனாகவு மிருப்பானென்று நிச்சயமாக அவருக்குத் தோன்றினால் அப்போது ஒரு தினத்தில் தன் சிஷ்யர்களிலொருவரிடம் இன்னமனிதன் நல்லவன், அவனை இன்றிரவு என்னிட மழைத்து வாவென்று சொல்லலாம். அவ்வார்த்தைகளின் கருத்தென்னவெனில், அவனை யேற்றுக் கொண்டு நன்றாகக் கவனித்து வருவாரென்பதுதான். அப்படிப்பட்ட அபேக்ஷகன் அம்மகான்களிடம் உபதேசம் பெற்றிருக்கும் ஒருவருடைய சமீபத்திலாவதுஅல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட சிஷ்யரொருவருடைய சமீபத்திலாவதிருந்து கொண்டிருக்க வேண்டும். அதனாலவன் அநேகவிஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். அவர்கள் மூலமாக இடையிடையே குருநாதனிடமிருந்து தைரியத்தைக்கொடுக்கும் அரிய வார்த்தைகளைப்பெறலாம். தனக்குமேலான நிலைமையிலிருக்கும் சிஷ்யர்களுடைய நடவடிக்கைகளைப்பார்த்துத் தானெவ்விதம் நடக்கவேண்டுமென்று தெரிந்து கொள்ளலாம். எவனொருவன் இவ்வழியில் வேலைசெய்து கொண்டிருக்கிறானோ, அவனுக்குத்தான் சமாசாரம் வருவது சகஜமே யொழிய அதைப்பற்றி நினைத்துக்கொண்டுமட்டு மிருப்பவனுக்குச் சமாசாரம் வருவதில்லை.

குருநாதர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். அபேக்ஷகர் சிலருக்கு ஒருவரிடமும் மற்றவர்களுக்கு வேறுசிலரிடமும் பற்றுதல் ஏற்படுகிறது. இதனாற் பாதகமொன்றுமில்லை. அவர்களெல்லோரும் மஹிமையுள்ளதாகிய ஒரே வேலையைத் தான் செய்துவருகிறார்கள். சிலவேளைகளில் அபேக்ஷகர் சிலருக்குக் குருநாதர்களிடத்துப் பற்றுதலேற்படாமற் குருநாதருடைய முக்கிய சிஷ்யர்களாயிருப்பவர்களிடம் அதிகப் பற்றுதலுண்டாகிறது. சீஷர்களை அவர்கள் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துத்தெரிந்துகொண்டிருப்பதால் தாங்கள்நேரில் பார்த்திராத குருநாதர்களைக் காட்டிலும் சீஷர்களிடமே அவர்களுக்கு அதிகப்பற்றுதலேற்படுகிறது. இனி வரும் ஜன்மங்களில் அம்முக்கிய சிஷ்யர் ஒரு சித்தராக (Adept ஆகும்போது இவ்வபேக்ஷகன் அவருக்குச் சிஷ்யனாக அமைவான் என்பது பெரும்பாலும் அதன் கருத்தாகும். அம்முக்கிய சிஷ்யர் சித்தர்

நிலையை அடைவதற்குமுன் இவ்வபேக்ஷகன் ஒருக்கால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குப் பாத்திரனாய் விடுவானானால் அப்போது அம் முக்கிய சிஷ்யருடைய குருநாதன் இவ்வபேக்ஷகனை யேற்றுக் கொண்டு தன் சிஷ்யன் சித்தனாகும் காலம் வரை கவனித்து வருகிறார். அக்காலத்தில் அவ்வபேக்ஷகனைச் சீர்திருத்துதற்கு வேண்டிய உபதேசமொழிகளை யெல்லாம் தன் அன்புள்ள முக்கிய சிஷ்யன் மூலமாகவே அனுப்புவார்.

பிரஹ்மக்ஞான சங்கம் இவ்வுலகில் ஏற்படுத்தப்பட்டு 38 வருடங்களாகின்றன. நீண்டகாலம் அது சிரமப்பட்டுச் செய்து வந்த வேலைகளின் பயன் பெரும்பாகம் முன்னமேயே வெளியாயிருக்கிறது. அதனாலேற்பட்டிருக்கும் நன்மைகளை யாவரும் பிரத்தியக்ஷமாக அறிவார்கள். ஆனால் எல்லோருக்குமே அவ்வளவு பிரத்தியக்ஷமாகத் தெரியாத குப்தமான விஷயங்களிலும் அது பயனை உண்டாக்காமலிருக்கவில்லை. இச்சங்கத்தின் மூலமாக இதற்காதிகர்த்தர்களாயிருக்கும் மகான்களுடைய சமீப்ப பதவியையும் சிலரடைந்து இதனால் போதிக்கப்படும் விஷயங்களின் உண்மைகளையும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். பிரஹ்மக்ஞான சபையை இவ்வுலகில் ஸ்தாபித்தவரும் பிரகாசத்தை நமக்குக்கொண்டுவரும்பொருட்டு மிகுந்த கஷ்டத்தை வகித்தவருமாகிய ஹெலிநாம்பாள் (Madame Blavatsky) அம்மையார், அது கருவிலிருந்து வெளிப்படும் சிரமத்தைமட்டும்பார்த்து அதனாலேயே திருப்தியையடைந்துவிட்டார்கள். ஆனால் அவ்வம்மையார் செய்கையால் நன்மையை அடைந்தவர்களெல்லாரும், அவ்வம்மையார் நடந்த அம்மார்க்கத்தில் நடக்கும்படி அவர்களுடைய கீர்த்தியானது வரவர அதிகமாகுமென்று தோன்றுகிறது. (மோக்ஷ) மார்க்கத்தின் கதவு முன்போலவே யெப்போதும் திறந்தே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் வழியாகச்செல்வதற்குத் தங்களைத் தயார்செய்து கொள்பவர் யாவர்?

ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர்.

# "ஸ்வர்ணமணிமாலை" என்ற சங்கம்*

இந்தச் சங்கம் சிறுவர்கள் எல்லோரும் சேருவதற்கு ஏற்பட்டது. அடியில் எழுதியிருக்கின்ற வசனங்களை இந்தச் சங்கத்தில் சேருகின்ற ஒவ்வொருவரும் தினம் ஒருதரம் படித்து,மனதில்நினைக்க வேண்டியது.

1. ஸ்நேஹம் என்னும் கம்பியால் நம்முடைய சங்கமாகிய "ஸ்வர்ணமணிமாலை" கோக்கப்பட்டிருக்கிறது. இந்த மாலையில் நான் ஒரு மணியாவேன். இந்த மாலை உலகமுழுவதையும் சேர்த்து அணைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது இந்தச் சங்கம் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இருக்கின்றது. இந்த "ஸ்வர்ணமணிமாலையில்" ஒரு மணியாயுள்ள நான் உறுதியுள்ளவனாகப் பிரகாசிப்பேன்.

2. அதனால் எனக்கு எதிர்ப்படும் எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்த முயலுவேன். என்னின் மெலியாரைக் காப்பாற்றவும் அவர்க்கு உதவிபுரியவும் முயலுவேன்.

3. எப்போதும் மேன்மையான எண்ணங்களையே சிந்திக்கவும், இனிய சொற்களையே பேசவும், நல்லகாரியங்களையே செய்யவும் நான் பழகுவேன். இவ்விதம், பிறருக்கு உபகாரமாகவும் நல்லவனாகவும் நடப்பேன்.

4. இம்மாலையின் மணிகளாகிய மற்ற சிறுவர்கள் ஒவ்வொருவரும் எப்போதும் பளபளப்பும் உறுதியுமான மணிகளாயிருக்கவேண்டுமென விரும்புகிறேன், அதாவது நல்ல பிள்ளைகளாகவேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த நான்கு வசனங்களையும் சிறுவர்கள் இலகுவாக ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்காக, பாட்டாகவும் அடியில் எழுதியிருக்கிறோம். ஸ்வர்ண மணிகளாகிய சிறுவர்கள் எல்லோரும் கீழேயுள்ள பாட்டை ஒருங்கே சேர்ந்து பாடப் பழகிக்கொள்வது சிலாக்கியமாகும்.

(1) அம்மணியாம் புவிமாதுக் கழகுறச்சூழ் அன்பென்னும்
செம்மணியாம் சுவர்ணமணி மாலைதனிற் செழுமணியாம்
நம்மணியாஞ் சிறுவர்களில் நானுமொரு மணியாவேன்
இம்மணிதான் பளபளப்பாய் உறுதியதாய் இருந்திடுக.

---

* இச்சங்கம் பற்பல தேசங்களிலுள்ள சிறுமிகளுக்கும் உரியது.

இது காலஞ்சென்ற ப. நாராயண ஐயரவர்களின் மனோரதப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(2) ஆதலினால் எதிர்ப்படுமெவ் வுயிரையும்நான் அன்பாகச்
சோதரர்போல் நடத்திடவே தொடங்குவனால்; நொய்யவரை
ஈதலினால், இன்மொழியால், இயன்றளவும் உபகரித்துக்
காதலினாற் காப்பாற்றக் கடைசிவரை முயன்றிடுவேன்.

(3) தூய்மையாஞ் சிந்தனையாற் சுடர்விடநன் மனந்துலக்கி
வாய்மையாம் நன்மொழியால் மாசகல வாய்கழுவித்
தீமைதா னிலாச்செயலால் தேசுபெற மெய்திருத்திச்
செய்மையாம் வழியொழுகத் தினந்தினமும் முயல்வேனால்.

(4) இவ்வண்ணம் நல்லனாய், எவர்க்கும்பயன் படவாழ்வேன்
செவ்வண்ணச் சுவர்ணமணி மாலைதனிற் சேர்ந்திருக்கும்
தெவ்வண்ணம் இலாமணியாம் சிறுவர்களு முறுதிபெற
அவ்வண்ணங் குறையாமல் அழகுறவே வேண்டுவனால்.

'ஸ்வர்ண மணிமாலை' என்ற சங்கம் 1895-வருஷத்தில் அமெரிக்காவில் Mr. வால்டர்ஸ் என்பவரால் ஸ்தாபிக்கப் பட்டது. இவருடைய வேண்டுகோளின் பிரகாரம், இச்சங்கத்தின் லக்ஷ்யமாகிய நான்கு வசனங்களும், கியாதி பெற்ற ஸ்ரீ அன்னி பெஸண்ட் அம்மையாரால் ஆலோசித் தெழுதப் பட்டன. உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இச்சங்கம் பரவி யிருக்கின்றது; எல்லா விடங்களிலும் இச் சங்கத்தைச்சேர்ந்த ஸ்வர்ண மணிகள் பிரகாசிக்கின்றன. அதாவது, இச்சங்கத்தைச்சேர்ந்த சிறுவர்கள் எல்லோரும் தாம் பழகும் உயிர்ப் பிராணிகளிடத்தும் ஜநங்களிடத்தும் அன்போடும், கருணையோடும், அமரிக்கை யாகவும் நடந்து கொள்வார்கள் என்பதாம். அதனால், மற்றவர்களும் அன்பு, கருணை, அமரிக்கை என்னும் குணங்களுடன் பிரகாசிப்பார்கள். உலகத்திலுள்ள நாநாவித ஜாதியார்களான சிறுவர் சிறுமிகளுக்கு 'ஸ்வர்ண மணிமாலை' ஒரு பொதுச் சங்கமாகும் இச்சங்கம் ஏற்பட்டதுமுதல் அநேக மணிகள் (சிறுவர்கள்) சேர்ந்து, மாலையானது (சங்கம்) இப்போதுவெகு நீளமாயிருக்கிறது. இன்னும் நாளுக்கு நாள் மணிகள்(சிறுவர்கள்) சேரச் சேர பெரிதாகியே வருகிறது. இச்சங்கத்தின் ஆதியில் சேர்ந்த சிறுவர்கள் அநேகர் இப்போது வயது ஆனவர்களாயிருக்கிறார்கள்.

இச் சங்கத்தில் சேருகின்றவர்கள் எல்லோரும் ஒவ்வொரு நாளும் காலையில் தூங்கி எழுந்தவுடன், மேலேயுள்ள நான்கு வசநங்களையும் ஒருதரம் படிக்கவேண்டும். அத்துடன், படித்த பிரகாரமே ஒவ்வொருநாளும் நடக்கவும் முயற்சிக்க வேண்டும். இது தான் சங்கத்தாரின் கடமை. இந்தச்சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இனமாக ஒரு சிறு புஸ்தகம் கொடுக்கப்படும். இச்சங்கத்தில் மெம்பராக வேண்டிய சிறுவர் ஒவ்வொருவரும் இத்துடன் உள்ளகார்டில் தம் சொந்தக்கையெழுத்தால் கலங்களைப் பூர்த்திசெய்தனுப்பவேண்டும்.

நாய், பூனை, ஆடு, மாடுகள் முதலிய பிராணிகளுக்குக் கூட இந்தச் சங்கத்தின் மெம்பர்களாகிய ஸ்வர்ண மணிகளிடத்தில்வெகு பிரியம். ஏனென்றால் மற்ற பையன்களைப் போல பிராணிகளைக் கல்லால் எறிதலாவது அடித்தலாவது செய்யாமல் ஸ்வர்ண மணிகள் தங்களால் கூடியமட்டும் ஏதாவது தின்பண்டம், பக்ஷணம் அல்லது புல் இவைகளைக் கொஞ்சம் அப் பிராணிகளுக்குக் கொடுத்து அவைகளைப் பிரியமாகவே நடத்துகிறார்கள்.

B. S. ராமசுப்பையர்.

---

## நன்மொழி.

---

கரணமிகக் களிப்புறவே கடலுலகும் வானுங்
கடிபதியென் றாளுகின்றீ ரதிபதியீர் நீவிர்
மரணபயந் தவிராதே வாழ்வதிலென் பயனோ
மயங்காதீ ருயங்காதீர் வந்திடுமி னீண்டே
திரணமுமோ ரைந்தொழிலைச் செய்யவொளி வழங்குஞ்
சித்திபுர மெனவோங்கு முத்தரசிற் சபையில்
சரணமெனக் களித்தெனையுந் தானுக்க வெனது
தனித்தந்தை வருகின்ற தருணமிது தானே.

---

2/18

## சிறுவர்க்குரிய விஷயம்,

### நீங்கள் பெரியவர்களாவது எப்படி?

ஸ்வர்ண மணிகளே!

நீங்கள் எல்லோரும் இப்போது சிறுவர்களாயிருக்கிறீர்கள். இதில், நீங்கள் எல்லோரும் எப்படிப் பெரியவர்களாகலாம் என்பதைச் சொல்லப்போகிறேன். ஏனென்றால், சீக்கிரம் பெரியவர்களாகப் பிரியம் உங்களுக்கு அதிகமாயிருக்கிறது என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். "எங்களுக்கு வயது ஆக ஆக நாங்களே பெரியவர்களாகிறோமே!" என்று நீங்கள் கேட்கலாம். அது நிஜம் தான். ஆனாலும், உங்கள் சரீரம் வியாதியில்லாமல் பலப்பட்டு வளரும்படியாக, உங்கள் தாயார் உங்களுக்கு காலை, மாலை, இராத்திரி மூன்றுவேளைகளிலும் ஆஹாரம் ஊட்டுகிறார்களல்லவா? ஒரு புளியின் விதையை நிலத்தில் ஊன்றி ஜலமே விடாமற்போனால், அது முளைக்குமோ? ஒருநாளும் முளைக்காது. அதுபோலவே, உங்கள் தாயார் உங்களுக்கு சாப்பாடே போடாமலிருந்தால், உங்களுடைய சரீரம் எப்படி வளரும்? ஆகையால் உங்கள் தாயாருடைய உதவியில்லாமல் நீங்கள் எப்படிப் பெரியவர்களாவீர்கள்?

நீங்கள் பெரியவர்களாகவேண்டுமென்றால் உங்கள் சரீரம் மட்டும் வளர்ந்தால் போதாது. அப்படியானால் வீட்டில் இருந்துகொண்டு நன்றாய் மூன்றுவேளையும் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் போதுமே! உங்கள் தகப்பனார் உங்களை ஏன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்? ஒவ்வொரு மாதமும் உங்களுக்காகப் பள்ளிக்கூடத்திற்குச் சம்பளமும் கொடுத்துவருகிறார். நீங்களும் பள்ளிக்கூடத்திற்குப்போய் அங்கே இங்கிலீஷ், கணக்கு, தமிழ், பூகோளசாஸ்திரம் முதலிய பாடங்களைப் படித்துவருகிறீர்களே! இவையெல்லாம் எதற்கு? நான் முன் சொன்னபடியே நீங்கள் பெரியவர்களாவதற்கு உங்கள் சரீரம் மட்டும் வளர்ந்தால் போதாது. ஆனால், உங்கள் புத்தியும் கொஞ்சங் கொஞ்சமாக, அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டு வளரவேண்டும். உங்களுடைய சரீரம் நன்றாய் வளருமானால் கனமான சாமான்களை இலகுவாய்த் தூக்கக்கூடும். உங்களுடைய புத்தி நன்றாய் வளருமானால் உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்கும் பாடங்களை இலகுவாய்த் தெரிந்துகொள்ள முடியும்.

ஆகையினால் பெரியவர்களாகவேண்டுமானால் நீங்கள் பலசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருக்கவேண்டும். அதோடு நல்லவர்களாகவும் இருக்கவேண்டும். இந்த மூன்று விதங்களினும் நீங்கள் தேர்ந்தவர்களா யிருந்தால்தான், நீங்கள் பெரியவர்களாகலாம்.

முதலாவது, உங்களுடைய தேகம் சௌக்கியமாகவும் பலமுள்ளதாகவும் இல்லாமற்போனால், நீங்கள் சிரமப்பட்டுப் படிக்கமுடியாது. அதற்காக, நன்றாய்ச் சாப்பிடவேண்டும்; ஆனால் எப்பொழுதும் தீனியின்மேலே நினைவாயிருக்கவும் கூடாது. சாப்பிடும் வேளைகள் தவிர மற்ற வேளைகளில் தீனியைப்பற்றி நினைக்கக்கூடாது. நன்றாய் ஓடி ஆடி விளையாடவேண்டும். ஆனால் விளையாடும்போது மற்ற பையன்களை அடிக்கக்கூடாது. பகலில் வெயில் அதிகமாகச் சுடும்போதெல்லாம் விளையாடக்கூடாது. சாயங்காலவேளைகளில் மட்டும் விளையாடலாமேயொழிய, பள்ளிக்கூடத்தில் படிக்கும் நேரங்களிலும், காலையில் வீட்டில் பாடம்படிக்கவேண்டிய நேரங்களிலும் விளையாடக்கூடாது. இராக்காலங்களில் அதிகநேரம் கண் விழிக்காமல், தூங்கப்போவதும், விடியற்காலம் சூரியன் உதயமாகுமுன் படுக்கையைவிட்டு எழுந்து, கை, கால் முகங்களைச் சுத்தமாகக் கழுவி நன்றாகப் பல்துலக்கிப்பிறகு கடவுளைப்பணிந்து சாப்பிடுவதும்தேஹ சௌக்கியத்திற்கு ஏற்றவை. ஒவ்வொருநாளும் தவறாமல் காலையில் ஸ்நாநம் செய்யவேதோடும் நீங்கள் சாப்பிடும் ஆஹாரமும், குடிக்கும் தண்ணீரும், உட்கொள்ளும் காற்றும், உடுத்திக்கொள்ளும் வஸ்திரங்களும் சுத்தமாயிருக்கவேண்டும். அப்போதுதான் உங்கள் தேஹத்திற்கு விபாதி ஒன்றும் வராது. என் சிநேகிதர்களே! இதை வாசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உடம்பையும் வஸ்திரங்களையும் எப்போதும் மிகச்சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும். கொஞ்சங்கூட அழுக்கு அடையவிடக்கூடாது. கீழே உட்காரும்போதெல்லாம் ஆஸனப் பலகையைப் போட்டுக் கொண்டு உட்காரவேண்டும். இல்லாவிட்டால் பெஞ்சுகளிலாவது நாற்காலிகளிலாவது உட்காரவேண்டும். உங்கள்உடம்பு செள்க்கியமாயிருப்பதற்கு முக்கியமாய் கவனிக்கவேண்டியது சுத்தம். மேலே சொன்னவிதமாக நீங்கள் நடந்து வருவீர்களேயானால் நீங்கள் நல்ல பலசாலிகளாவீர்கள். அதனால் நன்றாய்ச் சிரமப்பட்டுப் படிப்பீர்கள்.

அதனால் உங்கள்புத்தி பலப்படும். அப்போது புத்திசாலிகளாவீர்கள். ஆகையால் நீங்கள் புத்திசாலிகளாவதற்கு, தேஹபலமும் ஒத்தாசையாயிருக்கிறது, பார்த்தீர்களா?

இப்போது, புத்திசாலிகளாவதற்கு வேண்டியவழிகளை உங்களுக்குச் சொல்லுகிறேன். நன்றாய்க் கவனியுங்கள். பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக ஒருநாள்கூடத் தவறாமல் போகவேண்டும். அங்கேமற்ற பையன்களுடன் அடிக்கடி சண்டைபோட்டுக் கொள்ளாமலும் எப்போதும் விளையாடாமலும், உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது கவனமாய்க் கேட்டுக்கொண்டுமிருக்கவேண்டும். பிறகு, உங்களுக்குச் சொல்லிக்கொடுத்ததை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டு மறவாதிருக்கவேண்டும். லீவ் நாட்களில் உபாத்தியாயர் கொடுக்கும் வீட்டுக்கணக்குகளைத் தவறாமல் செய்து முடிக்கவேண்டும். வீட்டுக் கணக்கு நோட்டுப் புஸ்தகங்கள், கோலங்கள் போடும் (டிராயிங்) நோட்டு புஸ்தகங்கள் இவைகளைச் சுத்தமாகவும், அழகாகவும், அழுக்காக்காமலும் நன்றாய் வைத்துக்கொள்ளவேண்டும். புஸ்தகங்களெல்லாவற்றிற்கும் அட்டைபோட்டு வைத்துக்கொள்ளவேண்டும். எப்போதும் வரிகளை நெருக்கமாய் எழுதுதல் கூடாது. எழுத்துகளைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதவேண்டும். உபாத்தியாயர் ஒவ்வொருநாளும் சொல்லிக்கொடுக்கும் பாடங்களைத் திருப்பித் திருப்பிப் பலதடவை வாசிக்கவேண்டும். பழையபடி உங்களுக்குத் தெரியாத சந்தேகங்களை உபாத்தியாயரிடம் கேட்டுக்கொள்ளவேண்டும். உபாத்தியாயர்கள் அல்லது பெரியவர்கள் யாராவது உங்களைக் கேட்கிற கேள்விகளுக்குக் கூசாமல் தைரியமாய் பதில் சொல்லவேண்டும்.

இப்போது பலசாலிக ளாவதற்கும், புத்திசாலிகளாவதற்கும் வழிகளைத் தெரிந்து கொண்டீர்கள். பெரியவர்க ளாவதற்கு பலசாலிகளாயும், புத்திசாலிகளாயும் மட்டும் இருந்தால் போதாது என்று சொன்னேனல்லவா? இப்போது, நல்லவர்களாயிருப்பதற்கு எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை எழுதப்போகிறேன்: முதலாவது, ஒரு பொழுதும் பொய்சொலக்கூடாது. எப்பொழுதும் நிஜத்தையே சொல்ல வேண்டும்.

உங்கள் தாயார், தகப்பனர் முதலிய பெரியவர்கள் உங்களைக் கோபித்துக்கொண்டாலும் நீங்கள் கோபப்படக்கூடாது. "ஆறுவது சினம்" என்று நீங்கள் படித்திருப்பீர்களே? அதன் அர்த்தம் என்னவென்றால் நாம் ஒருபோதும் யாரிடத்திலும் கோபங் கொள்ளலாகாது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று ஔவையார் எழுதியிருக்கிறபடி, உங்களுக்குத் தாயார் தகப்பனர், இவ்விருவர்களும் தான் முதலில் அறிந்துகொள்ளக்கூடிய தெய்வமாவார். தெய்வம் என்றால் என்ன? தெய்வத்தைக் கோவில்களில் பூஜை செய்கிறோமல்லவா? வீடுகளிலும் படங்களை மாட்டி பூஜை செய்கிறோமல்லவா? இந்த தெய்வத்தைவிட முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய தெய்வம் உங்கள் தாய் தகப்பனர்தான் என்று நன்றாய் மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் உங்களுடைய தாயார் தகப்பனரிடம் ஒரு பொழுதும் கோபங்கொள்ளக்கூடாது. நீங்கள் நல்ல பிள்ளைகளாக வளரவேண்டியதற்கு, ஒருசமயம் அவர்கள் உங்களைக் கோபித்துக்கொண்டால், நீங்கள் கோபப்படக்கூடாது. அவர்களிடம் நீங்கள் மிக அன்பு பாராட்டுவதுடன், மரியாதையாகவும் இருக்கவேண்டும். அவர்கள் சொல்லும் வார்த்தைகளைத் தட்டாமல் உடனே கேட்டுக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அவசியம். உங்களைப்போன்ற பையன்களிடத்தில் எப்போதும் அன்பு பாராட்டவேண்டும். அதாவது ஸ்நேஹமாயிருக்கவேண்டும். மற்ற பையன்களைக் கேலி செய்வதும், அதனால் அவர்கள் மனத்தைப்புண்படுத்துவதும் தகாத காரியம். பிறருக்கு ஒரு கெடுதலும் நீங்கள் செய்யலாகாது. கெட்டவார்த்தைகளைப் பேசுவதையும் கண்டிப்பாய்த் தவிர்க்கவேண்டும். கெட்ட எண்ணங்களையும் மனத்தில் வைக்கக் கூடாது. ஆனால் நல்ல காரியங்களையும் இனிய வார்த்தைகளையும் மேலான எண்ணங்களையுமே எப்போதும் கொள்ளவேண்டும். ஒரு குழந்தை மெல்ல மெல்ல நடந்து போகும்போது தவறிக் கீழே விழுந்து விட்டதென்று வைத்துக் கொள்ளுவோம். அப்போது அதைக் கையைப்பிடித்துத் தூக்கிவிட்டால் அது ஒரு நல்ல காரியம். ஒருகுருடன் வழிதெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்தால், அவனுக்கு வழி காட்டுவது நல்ல காரியம். உன்

ஸ்நேகிதன் எவனாவது நாயின்மேல் கல்லெறிந்தால்,உடனே நீ அவ னுக்கு, அவ்விதம் செய்யலாகாதென்றும்,நம்மேல் ஒருகல்விழுந்தால் நமக்கு எவ்வளவு வலிக்குமோ, அவ்வளவு நாய்க்கும் வலிக்கும் என்றும் புத்தி சொன்னால், அது நல்ல வார்த்தை யாகும். உன் ஸ்நே கிதன் எவனாவது வியாதியினால் தேஹ அசௌக்கிய மாயிருந்தால் அவன் சீக்கிரம் சௌக்கியமடைய வேண்டுமென்று நீ விரும்பினால் அதுவே நல்ல எண்ணமாகும், பிறருடைய வஸ்துக்களில் பேராசை கொண்டால், அந்த வஸ்துவைத் திருட ஆரம்பிப்பீர்கள். அது பெ ரிய குற்றமாகும். பிறர் உங்களுக்கு எந்தக் காரியங்களைச் செய்யலா கா தென்றும், எந்த வார்த்தைகளை உங்களிடம் பேசலாகாதென்றும் எந்த எண்ணங்களை உங்களுக்கு விரோதமாய் எண்ணலாகா தென் றும் நீங்கள் விரும்பு கிறீர்களோ, அவைகளை நீங்களும் பிறருக்குச் செய்யலாகாது.

ஸ்வர்ண மணிமாலைச் சங்கத்தின் நான்கு வசநங்களையும் திநம் ஒருதரம் படித்து வருவீர்களேயானால் உங்களுடைய நடத்தையும் சீர்திருந்தும். உங்களைப் பார்த்து இன்னும் அநேகம் பிள்ளைகள் நல்லவர்களாவார்கள். ஸ்வர்ண மணிமாலைச் சங்கத்தில் நீங்கள் சேருவது போலவே உங்கள் சிநேகிதர்களையும் சேர்க்க வேண்டும். ஆகையால் நீங்கள் எப்போதும் அன்புள்ளவர்க ளாவே தான் இரு க்கவேண்டும். ஒரு மாலையானது உறுதியாயிருப் பதற்கு, அதன் மணிகளைக் கோத்து கட்டக் கூடிய கம்பி ஒன்று வேண்டி யிருப் பது போல, நம்முடைய சங்கம் எந்நாளும் நிலைத்தி ருப்பதற்கு ஸாதகமாக அன்பு வேண்டும். நீங்கள் அன்புள்ளவர்களாகி, அழ கான காரியங்களையும் இனிய சொற்களையும், மேலான எண்ணங் களையும் கைக்கொள்ளா விட்டால், நீங்கள் எவ்வளவு பலசாலிகளா யிருந்தாலும், நீங்கள் எவ்வளவு புத்தி சாலிகளா யிருந்தாலும் உபயோகமில்லை. நீங்கள் அன்புள்ளவர்களாயிருந்தால் பிறரும் உங் களிடம் பிரியமுள்ளவர்களாயிருப்பார்கள். நீங்கள் பிறரைத் துவேஷித்தால் பிறரும் உங்களைத் துவேஷிப்பார்கள்.

இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் மேலே சொன்னபடி நடந்து பலசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும், நல்லவர்களாகவும் ஆவீர் களென்று நம்புகிறேன். அப்பொழுது உங்களை எல்லோரும் பெரி யவர்களென்று மதிப்பார்கள்.

வஸந்தாநந்தர்.

## சமாசாரம்.

---

**திருச்சூரில் பிரஹ்மஞான கிளைச்சபைகளின் கூட்டம்:**—திருவாங்கூர் சமஸ்தானம், கொச்சி சமஸ்தானம், மலையாளம் ஜில்லா இவைகளடங்கிய கேரள தேசத்திலுள்ள பிரஹ்மஞான கிளைச்சபைகள் சேர்ந்து சென்ற செப்டம்பர்மீ 26, 27, 28-ம் தேதிகளில், திருச்சூரில் ஒரு மகாசபை நடத்தப்பெற்றது. அந்தச்சபையில் மாது ஸ்ரீ அன்னிபெசண்டு அம்மாளவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அச்சமயத்தில் பல அருமையான விஷயங்களைப் பற்றி மஹோபந்நியாசங்கள் நடந்தன.

---

**சிசுமரணம்:**—மற்ற தேசங்களைக் காட்டிலும் நம்முடைய இந்தியாதேசத்தில் வரவரக் குழந்தைகளின் மரணத்தொகை அதிகரித்து வருகின்றது. ஜனன மரணக் கணக்கின்படி இந்தியாவில், 1911 ம் வருஷத்தில் 44,57 551 பெண் குழந்தைகளும், 47,52,152 ஆண் குழந்தைகளும் பிறந்ததாகவும் அந்த வருஷத்தில் 8,73,677 பெண் குழந்தைகளும், 10,16,823 ஆண் குழந்தைகளும், இறந்ததாகவும் தெரிய வருகிறது. அதாவது ஜனனத்தொகையில் சுமார் ஐந்திலொருபங்கு மரணத்தொகையாகிறது. அவ்வளவு ஜாஸ்தி சிசுமரணங்களுக்கு முக்கியமான காரணங்கள்; தாய் தந்தையர்களின் பால்ய விவாகமும், பிரசவ காலத்தில் சரியானபடி மருத்துவம் செய்யக்கூடிய ஸ்திரீ வைத்தியர் கிடையாமையும், அசுத்தமான பசுவின் பாலைச் சிசுக்களுக்கு உணவாகப் புகட்டுவதும் தாய்மார்கள் இளங்குழந்தைகளை வளர்க்கும் முறை அறியாமையுமே தான். இந்தக் காரணங்களைப் போக்கும் வழியைக் கைக்கொண்டு நாமெல்லோரும் சிசுமரணத்தை விலக்க முயற்சி எடுத்துக் கொண்டாலல்லாமல் நம்முடைய நாட்டிற்கு க்ஷேமமுண்டாவ தெப்படி?

---

**பால்ய விவாக நிவிர்த்தி சாதனம்:**—பால்ய விவாகத்தால் விளையும் தீங்குகளை ஆசார சீர்திருத்தத்தில் ஊக்கமுடையவர்களுடைய உபந்நியாசங்களாலும், வியாசங்களாலும் நாம் பலமுறைதெரிந்து கொண்டிருந்தும், அதை நிவிர்த்திப்பதற்கு சாதனமானவழிகளைநாம் கைக்கொள்ளவில்லை. மாது ஸ்ரீ அன்னிபெசண்டம்மாளவர்கள்காசியில்ஸ்தாபித்த (Central Hindu College) என்னும்கலாசாலையில் அந்தத் தீங்குகளை ஒருவாறு விலக்கும் பொருட்டு விவாகமான பையன்களைச் சேர்த்துக் கொள்வதில்லை என்று ஏற்பாடு செய்தார்கள். இப்போது அவர்களுடைய ஆதரவின் மேல் கான்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற கலாசாலையிலும் அது போலவே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கலாசாலைகளிலும் அவ்விதமான ஏற்பாடு செய்யவேண்டுமென்கிற உத்தேசத்துடன் மகாராஜா அவர்கள் அது விஷயமாய் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து ரிப்போர்ட்டு செய்யும்படி, திவான் பேஷ்கார்களுக்கு உத்தரவு செய்திருக்கிறார்களாம்.

ஸ்திரீ வைத்தியப் படிப்புக்குப் பொருளுதவி:—நம்முடைய இந்திய தேசத்திற்கு நன்மை பயக்கக் கூடிய அனேக அவசியமான காரியங்களுக்கு பம்பாயிலுள்ள வாடியா தர்ம ஐவேஜி லிருந்து ஏராளமான பொருளுதவி செய்து வருகிறார்கள். சென்னை ராஜதானியிலிருந்து இந்தியஸ்திரீகள் இவ்விடங்களிலுள்ள L. M. S. அல்லது M. B. C. M. முதலான வைத்தியப் பரீக்ஷைகளில் தேறி அதைக் காட்டிலும் வைத்தியத்தில் உயர்ந்த படிப்புப் படிக்க இங்கிலாந்திற்குப் போக விருப்பமிருக்குமானால் அந்த தர்ம பண்டிலிருந்து வருஷம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கு ரூ. 3000 வீதம் ஸ்காலர்ஷிப் கொடுத்து வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்களாம்.

---

குழந்தைக் காட்சி:—மாடுகளை நன்றாய் வளர்க்கும் விஷயத்தில் ஜனங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவதற்காக நம்முடைய நாட்டில் பலவிடங்களில் அடிக்கடி (Cattle show) மாட்டுக் காட்சிகள் ஏற்படுத்தி அந்தக் காட்சிக்குக் கொண்டுவரப்படும் மாடுகளில் எவனுடைய மாடு நன்றாய் வளர்க்கப்பட்டிருக்கிறதோ அவனுக்கு பரிசு கொடுக்கிறார்க ளென்பதைப் பார்த்திருக்கிறோம். அது போல இப்போது நம்முடைய தேசத்தில் வரவர அதிகரித்து வரும் சிசு மரணத்தை ஒருவாறு குறைக்கும் பொருட்டு நம்முடைய் தேசத்தில் மத்திய மாகாணத்தில் காண்ட்வா எனனும் பட்டணத்தில் முனிசிபாலிடியார் குழந்தைக் காட்சி ஒன்று ஏற்பாடு செய்து, சுகாதார விதிகளின்படி நன்றாய் வளர்த்த குழந்தை கொண்டு வந்தவனுக்குப் பரிசு கொடுத்தார்களாம். இது போல ஒவ்வொரு வருஷத்திலும் நடத்துவதாயும் தீர்மானித்திருக்கிறார்களாம் சிசு மரணத்தை விலக்க இது சிலாக்கியமான வழியில்லையாயினும் எளியவர்களுக்கு இது குழந்தைகளை நன்றாய் வளர்க்க ஒரு தூண்டுதலாயிருக்கு மென்பதிற் சந்தேகமில்லை.

---

தாழ்ந்த ஜாதியார்:—பிரிட்டிஷ் இந்தியாவில் 1901 ம் வருஷத்தில் எடுத்த சென்ஸஸ் கணக்கின்படி மொத்த ஜனத்தொகை 294,3,61,056 அதில் தாழ்ந்த ஜாதியா ரென்று சொல்லப்படுகிறவர்களின் தொகை 76,3,68,671. யென்று தெரிய வருகிறது. அவர்களுக்குக் கல்வி புகட்டி, அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரும் பொருட்டு சில வருஷங்களாக பம்பாய், கல்கத்தா, மதராஸ் முதலான அனேக இடங்களில் சங்கங்கள் ஏற்படுத்தியும் பள்ளிக் கூடங்கள் ஸ்தாபித்தும் முயற்சி செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும் அவர்களுடைய எளிமையினாலும் குழந்தைகளுள்பட வேலை செய்து சம்பாதித்துக் குடும்ப காலக்ஷேபம் நடக்கவேண்டியிருப்பதாலும் சாதாரணமாய் உயர்ந்த படிப்புக்கு இடமில்லை. அதற்காக தாழ்ந்த ஜாதியாருக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுக்க (Parl) பாரல் என்னுமிடத்தில் 1912-ம் வருஷத்தில்

ஒரு பாடசாலை ஏற்படுத்தி நடத்தி வரப்படுகிறது. மேலே சொன்ன வாடியா தர்ம ஐவேஜிலிருந்து அந்தப் பாடசாலைக்கு வருஷம் ஒன்றுக்கு 6000 ரூ வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பாடசாலையில் பிள்ளைகளுக்குச் சாப்பாடும்போட்டு தச்சுவேலை, தையல்வேலை, பைண்டிங்வேலை, வர்ணவேலை, சங்கீதம் முதலானவை போதிக்கப்பட்டு வருகின்றனவாம் அதுபோல பூனாவிலும், ஒரு கைத்தொழிற் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த ஜாதியில் சேர்ந்த அநேக ஸ்ரீமான்களும் ஸ்ரீமதிகளும் அதை ஆதரிக்கிறார்கள். இண்டோர் மகாராஜா துகாஜிராவ் ஹோல்காரவர்கள் அந்தப் பாடசாலைக்கு ரூ 20,000 நன்கொடை அளித்தார்களாம்.

---

**தாழ்ந்த ஜாதியார்களுக்குள் ஐக்கியநாணயசங்கங்கள்:-** பம்பாயில் தெருக்கூட்டி, கொல்லை வாரி ஜீவனம்செய்யும் தாழ்ந்த ஜாதியார்களில் அநேகர் குடி மிகுதியால், வருஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு ரூ 150 வீதம் வட்டிக்குக் கடன்வாங்கி, அந்தக்கடனை செலுத்தமாட்டாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர்கள் பேரில் அநுதாபங்கொண்டு இந்திய ஊழியசங்கத்தில் மெம்பரான ஸ்ரீமான் தேவதார் என்பவர் அவர்களில் சிலருக்குக் குடியால் வரும் கெடுதிகளை எடுத்துக்காட்டி, அவர்களுக்குள் ஓர் ஐக்கிய நாணயசங்கம் ஏற்படுத்தி, அவர்களுடைய சம்பாத்தியத்தில் மிகுதிப்படும் தொகைகளை அதில் டிபாசிட் செய்யச்சொல்லி, அவர்களில் அவசியமான செலவிற்குப் பணம் தேவையாயிருப்பவர்களுக்கு அந்தத் தொகையிலிருந்தே சொற்ப வட்டிக்குக் கடன் கொடுத்து நடத்திக்காட்டியதில், அவர்கள் அதனாலுண்டாகும் நன்மையை நன்குணர்ந்து அதுபோல் அனேக சங்கங்கள் ஏற்படுத்தி முன்னிருந்த கடன்களையும் தீர்த்து பிறரிடத்தில் அதிகவட்டிக்குக் கடன்வாங்க அவசியமில்லாமல், மேற்படி சங்கங்களைத் தாங்களே நன்றாய் நடத்திக்கொண்டு வருகிறார்களென்று தெரியவருகிறது.

---

**கல்கத்தாவில் ஸ்திரீகளுக்குக் கைத்தொழில் பாடசாலை.-** கல்கத்தாவானது ஜனநெருக்கமான பெரிய பட்டணம். அந்தப் பட்டணத்தில் அன்ன வஸ்திரத்திற்கு மார்க்கமில்லாமல் நிராதரவாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அனேக ஸ்திரீகளுக்கு ஒரு ஜீவனத்தைக் கல்பிப்பதற்காக அனேகம் ஸ்ரீமான்கள் சேர்ந்து ஒரு கைத்தொழிற்சாலையை ஸ்தாபித்து அதில் ஸ்திரீகளுக்குத் தகுந்தபடி தையல்வேலை, பித்தான்செய்வது, பொம்மைகளைசெய்வது, கெடியாரம் ரிப்பேர்செய்வது முதலான அனேகம் கைத்தொழில்களைக் கற்றுக்கொடுத்து அந்த சாமான்களை விற்பதற்காக 'மஹீலா சில்பஜார்' என்னும் வியாபாரசாலையையும் வைத்து நடத்துவதாக ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

**பரோடா விஜயம்சாலை:-** பரோடா மகாராஜா அவர்கள் அடிக்கடி பல பல தேசங்களுக்கும் சென்று பார்த்து அங்கங்கே ஜனங்கள் மேன்மையடைவ

தற்கு சாதனமாயுள்ள அனுஷ்டானங்களைத் தெரிந்து தன்னுடைய ராஜ்ஜியத்திலும் உடனே அவ்விதம் நடைபெறும்படி செய்துவருகிறாரென்பதை இப்பத்திரிகையில் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறோம். அப்படியே சரீரப்பயிற்சிக்காக நம்முடைய தேசத்திலும் இதர தேசங்களிலும் ஏற்பட்டுள்ள பல வழிகளைக் கற்றுக்கொடுக்கும்பொருட்டு பரோடாவில் விஜயம் சாலை (Gymnasium) ஒன்று ஏற்படுத்தியிருக்கிறாராம். அங்கே அதுசம்பந்தமான புத்தக சாலை ஒன்றும் அந்த அப்பியாசங்களுக்கு அவசியமான ஆயுதசாலை யொன்றும் வெளியூர்களிலிருந்து அங்கே வந்து இருந்து பயிலும் பிள்ளைகளுக்கு போஜன சாலையொன்றும் ஏற்படுத்தியிருக்கின்றாராம். அந்த விஜயம்சாலையில் இப்போது 600 பிள்ளைகளுக்குமேல் சேர்ந்து படித்துவருகிறார்களாம். மற்ற இடங்களிலும் ஏன் அவ்விதம் ஏற்பாடுசெய்து நடத்தக்கூடாது?

---

## நன்மொழி.

எவனொருவன் பிறர் விஷயங்களில் அநாவசியமாய்ப் பிரவேசியாமலும், பிறருடன் பழகும் முறைமையில் பிரஸன்னமான அந்தக்கரணத்துடன் ஸ்நேஹ பாவம் பாராட்டிக்கொண்டும், தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்பானோ, அவன் எவ்விதத்திலும் எளியவனுகான்.

***

மரத்தினின்று கீழேயுதிர்ந்த புஷ்பங்கள் எப்படி மறுபடியும் அம்மரக் கிளைகளிலேயே போய் ஒட்டிக்கொள்ளுகின்றனவோ அப்படியே "ஆண்டாண்டுதோறு மழுதுபுரண்டாலும்" மாண்டார் வீடுவந்து சேர்கின்றனரல்லர்.

***

ஒருவன் தன்னுடைய அறிவீனத்தை யுணர்ந்து மேன்மேலும் தன்னறிவீனத்தைக் களைய முயலுவானுகில், அவனையே நாம் ஞானியெனக் கூறலாம். மற்றொருவன் தன் அறிவையே அதிகமாகப் பாராட்டிக் கர்வங்கொள்வானுகில், அவனையே அக்ஞானி அல்லது அறிவீனன் எனக் கூறல் தகும்.

***

ஒரு விஷயத்தை பத்து உதாஹரணங்களின் மூலமாய் வாக்கினுல் மட்டும் வியவஹரித்துக் காட்டிய போதிலும், பிரத்யக்ஷமாகச் செய்யும் ஒரு நிரூபணத்திற்கு அது ஈடாகிறதில்லை.